Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 07 ஞாயிற்றுக்கிழமை (20.04.2014) பக்கங்கள் 20 ஓசை – 201

## தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கை அரசுடனேயே பேச்சு

### பாரதியஜனதா அறிவிப்பு

(சென்னை)

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமென பாரதிய ஜனதாக்கட்சி தெரிவித்துள்ளது.

திருச்சியில் நடைபெற்ற இந்திய மக்களவைத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவர் ராஜநாத்சிங் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.


இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காண்பதே எமது நோக்கம்.

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்.

மத்திய அரசாங்கம் இலங்கையுடன் சிறந்த ராஜதந்திர உறவுகளைப் பேணத் தவறியுள்ளது.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து இலங்கையுடன் காத்திரமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

அத்துடன் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.



தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கிணற்றில் தவறிவீழ்ந்த இளைஞன் உயிரிழந்தார்

கிணற்றில் தவறிவீழ்ந்த இளைஞன் உயிரிழந்த சம்பவம் மருதனார்மடம் கல்லாக்கட்டுவன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இணுவில் மேற்கைச்சேர்ந்த கணேசலிங்கம் தரிசன் (வயது 20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

நேற்று முன்தினம் இரவு கல்லாக்கட்டுவன் பகுதியில் இசை நிகழ்வு நடைபெற்றது. இதைப்பார்த்துக்கொண்டிருந்த வேளை குறித்த இளைஞருக்கு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. அவர் அதில் உரையாடியவாறு நடந்து சென்ற வேளை கிணறு இருப்பது தெரியாமல் வீழ்ந்து விட்டார்.

உடனடியாகவே அங்கிருந்தவர்கள் கிணற்றிலிருந்து மீட்டு யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவந்த போதிலும் அவர் உயிரிழந்துவிட்டார். சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் 64 வயதுடைய மூதாட்டியொருவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பத்மாவதி எனும் 64 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட மூதாட்டி வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் குறித்த மூதாட்டி கைது செய்யப்பட்டமைக்கான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. (29)

# ஐ.நா. மனித உரிமை அதிகாரிகள் பயண அனுமதி கோரவில்லை

### அரசாங்கம் தெரிவிப்பு

விசாரணைகளை மேற்கொள்வதற்காக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலக அதிகாரிகள் நாட்டிற்கு வருவதற்காக எந்தவித, கோரிக்கைகளையும் முன் வைக்கவில்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டின் போது, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்வைத்த பிரேரணை மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டன.

இதற்கமைய, நாட்டின் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக, மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக பிரதிநிதிகள் நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

எனினும், அவ்வாறான பிரதிநிதிகளுக்கு இலங்கை வருகை தர அனுமதி வழங்கப் போவதில்லை என வெளிவிகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜெனிவாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, இந்தப் பிரேரணை தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது..

தீர்மானம் சர்வதேச சட்ட மீறல் மட்டுமன்றி சர்வதேச விவகாரங்களில் அபாயகரமான சூழ்நிலையை உருவாக்கும் எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## பி.பி.சி. ஊடகவியலாளரின் விசா நீடிப்பு விண்ணப்பம் நிராகரிப்பு

பி.பி.சி செய்திச் சேவையின் இலங்கைக்கு பொறுப்பான ஊடகவியலாளர் சார்ள்ஸ் ஹெவலனுக்கு அரசாங்கம் வழங்கிய இரண்டு வருடத்திற்கான விசா அனுமதியை நீடிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.



இந்த மாதம் காலவதியாகும் அவரது விசா அனுமதியை புதுப்பிக்க அவர் விண்ணப்பித்திருந்த போதிலும், அவருக்கு மூன்று மாதங்களுக்கு மட்டுமே விசா

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரச்சினைகளை இந்தியா, ஐ.நா.விற்கு கூறுவதால் பயனெதுவுமில்லை

### தமிழ்க் கட்சிகளுக்கு கூறுகிறார் டி.யூ

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகள் தமது பிரச்சினைகளை இந்தியாவிற்கோ, ஐ.நா.விற்கோ கூறுவதில் எவ்வித் பலனும் ஏற்படப் போவதில்லையென சிரேஷ்ட அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் சுமார் 10 தமிழ் அரசியல் கட்சிகள் உருவாகின. கடந்த 60 வருடங்களாக பல அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்தன. எனினும் தேசிய ஐக்கியம் ஏற்படவில்லை.

அதேபோல் நாட்டின் பொருளாதாரம் போன்றே நாட்டின் அபிவிருத்தியும் பாதிப்பானது.

நாட்டில் தேசிய ஐக்கியம் இல்லாதது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல பிரச்சினைகள் ஏற்பட காரணமாகியுள்ளது.

நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைந்தாலும் தேசிய ஐக்கியம் இல்லாது போனால் அதனை தக்க வைக்க முடியாது. சகல அரசியல் கட்சிகளும் இதனை உணர்ந்து செயற்பட

(19) ஆம் பக்கம் பார்க்க

## போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படிப்படியாக நீதி கிடைக்கும்


### கூறுகிறார் தருஸ்மன்

இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படிப்படியாக நீதி கிடைக்குமென இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் தலைவர் மர்சூக்கி தருஸ்மன் தெரிவித்துள்ளார்.

நியுயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில், இன்னர் சிட்டி பிரஸ் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் தருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழு தயாரித்த அறிக்கை ஒன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளரிடம் வழங்கப்பட்டிருந்தது. இந்தக் குழு மேற்கொண்ட விசாரணை வெற்றிகரமானது என்று கருத முடியுமா? என்று தருஸ்மனிடம் வினவிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

கம்போடிய மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டது. ஆனால் அது படிப்படியாக கிடைத்துள்ளது என்று அவர் இதன் போது பதிலளித்தார்.



ஜயவருட பொதுப்பலன்கள் உள்ளே

உள்ளே தரம் 5 மாணவருக்கான புலமைப்பரிசில் வினாத்தாள்

## ஓட்சிசன் குறைபாடே மீன்கள் இறக்க காரணம்

### அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

தொண்டைமானாற்றுக் கடல் நீரேரியில் பெரும் எண்ணிக்கையில் மீன்கள் இறந்து மிதப்பதற்கான காரணம் ஆற்று நீரில் ஏற்பட்டுள்ள ஒட்சிசன் பற்றாக்குறைவே என வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தொண்டைமானாற்றுக் கடல்நீரேரியில், செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் இலட்சக்கணக்கான மீன்கள், குறிப்பாகத் திரளி வகை மீன்கள் இறந்து கரையொதுங்கின. இந்த அசாதாரண மீன் இறப்புத் தொடர்பாக ஆராயும்வகையில் நேற்றைய தினம் அமைச்சர்

(19) ஆம் பக்கம் பார்க்க

05



பாசாங்கு அரசியல்

18



ஆதரவு தேடல்

# மஞ்சள் கடவையில் வாகனங்கள் தண்டம் விதித்தனர் பொலிஸார்

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிற்கு முன்பாகவுள்ள வைத்தியசாலை வீதியில் உள்ள மஞ்சள் கடவையின் மீது மோட்டார் சைக்கிளினை நிறுத்திச் சென்றவர்களுக்கு யாழ். போக்குவரத்துப் பொலிஸாரினால் தண்டம் விதிக்கப்பட்டு அங்கிருந்து அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மஞ்சள் கடவையை பொருட்படுத்தாது மோட்டார் சைக்கிள்கள் துவிச்சக்கரவண்டிகள் போன்றவை நிறுத்தப்படுவதனால் வைத்தியசாலைக்கு வருகின்ற நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு நேற்று இந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த சுமார் நான்கு வகையான மோட்டார் சைக்கிள்களுக்கு 500 ரூபா தண்டம் போக்குவரத்துப் பொலிஸாரினால் விதிக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கோ அல்லது வேறு தேவைக்கோ குறித்த பகுதிக்கு வரும் பயணிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்க முயல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

# குழுக்களிடையே மோதல் ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வடக்கு சங்குவேலிப் பகுதியில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தகராறு மோதலில் முடிந்ததால் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறித்த பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இம்மோதலில் இரு குடும்பங்களைச் சேர்ந்த புஷ்பலீலா துலக்ஷி, சிவனாமசுந்தரி பெற்றிக் ஜெயககுமார், வேலாயுதப்பிள்ளை சண்முகநாதன் ஆகியோர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 39 வயதுடைய பெற்றிக் ஜெயக்குமாரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் குறித்த நபரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில சந்தேகநபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் ரீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக். பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை

**இல.6 கனகசபை லேன்**
**சிவலிங்கப் புளியடி**
**வண்ணார் பண்ணை**
**யாழ்ப்பாணம்.**
**0212228680,0775925088**

(C/3395)


# ஆங்கிலப் பயிற்சி நெறியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ்

(திருநெல்வேலி)

குளோறியஸ் யப்னா பௌண டேஷன் (Glorious jaffna foundation) இந்தியன் எண்ணெய் கம்பனியுடன் இணைந்து நடாத்திய ஆங்கிலப் பயிற்சி நெறியை மேற்கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் வீரமணி கலையரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளார். இவ்நிகழ்வில் அதிதிகளாக வடமாகாண சபை முதலமைச்சர் சீ.வீ.விக்னேஸ்வரன், கல்வியமைச்சர் குருகுலராஜா இந்தியன் எண்ணெய்க் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர்,குளோறியஸ் யப்னா பௌணடேஷன் தலைவர் மனோகரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 500 பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவியை குளோறியஸ் யப்னா பௌண்டேஷன் வழங்கி வருகிறது. இலங்கையில 150 பேர் ஆங்கிலக்கற்கை நெறியைப் பயின்று வருகின்றனர். கோபபாய் நாவலர் பாடசாலையில் ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் மூன்று மணித்தியாலங்களாக நடைபெற்ற இக் கற்கை நெறி ஆறுமாத காலத்தைக் கொண்டதாகும். கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரை இவ் ஆங்கிலப் பாடக் கற்கை நெறி நடைபெற்றது.

வன்னி யுத்தத்தில் தாயை அல்லது தந்தையை இழந்த மாணவர்களே இவர்களாவர் சகல கல்வி செயற்பாடுகளு இலவசமாகவே வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கில நெறியை மேற்கொண்ட மாணவர்கள் கோப்பாய் சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, உடுவில் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இது தவிர 5 ஆம் வகுப்புப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எட்டு மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. நான்கு மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகளும், நான்கு மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளன.

(137)

# மோட்டார் சைக்கிளில் வந்து ஹெல்மெட்டுக்களால் தாக்குதல்




மருதனார் மடம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பகுதி நேரப பணியாளராக கடமையாற்றும் ஒருவரை 5 மோட்டார் சைக்கிளில் வந்த 10 பேர் கொண்ட குழு ஹெல்மெட்டுக்களால் தாக்கிவிட்டு அவரிடம் இருந்து 22ஆயிரத்து 130 ரூபா பணத்தையும் பறித்து சென்றுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி இடைக்காடு பாடசாலை வீதியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி எடிசன் (வயது-27) என்பவரே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு இவ்வாறு தாக்கப்பட்டவராவார்.

அதேநேரம் இரு சைக்கிள்களின் இலக்கங்களை மட்டுமே பொலிஸ் முறைப்பர்ட்டின் போது தெரிவித்ததாக இவரின் முறைப்பாட்டில் ஏதோ சந்தேகம் நிலவுவதாகவும் இது தொடர்பக சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கிறீன்கிங்ஸ் ச.மு.நிலையத்தின் ஆண்டு விழாவும் ஈஸ்ரர் நிகழ்வும்

யாழ்ப்பாணம் கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையமும் கிறீன் கிங்ஸ் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்தும் கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு விழாவும் ஈஸ்ரர் கலைநிகழ்வும் இன்றும் நாளையும் நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

கிறீன்கிங்ஸ் சனசமூக நிலையத்தின் தலைவர் வி.நிர்மலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் அதிபர் திருமதி ஜே.கிறிஸ்ரபெல் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மரியன்னை பேராலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி ஆர்.எச்.சகாய நாயகம், யாழ்.மாநகர சபை முன்னாள் உதவிமேயர் து.இளங்கோ (றீகன்), சுண்டுக்குளி, தெற்கு ஜே.75 கிராம சேவையாளர் எஸ்.ஞானசேகரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று காலை 10.30 மணிக்கு மென்பந்து கிரிக்கெட் போட்டியும் மாலை 3.30 மணிக்கு உதைபந்தாட்டப் போட்டியும் இரவு 7 மணிக்கு கரப்பந்தாட்டப் போட்டியும் மின்னொளியில் மணமாகாதார் அணியும் எதிராக மணமானவர் அணியும் மோதவுள்ளன.

நாளை காலை 6 மணிக்கு ஆண்களுக்கான 50 கிலோ மீற்றர் தூரம் கொண்ட மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

மாலை 4 மணிக்கு ஆண்கள் பெண்கள் பலூன் ஊதி உடைத்தல் 50 மீற்றர் ஓட்டங்களும் முதியோர் ஊசியில் நூல் கோத்தல் தலையில் தொப்பி மாற்றல் வினோத உடைப்போட்டி கயிறிழுத்தல் மற்றும் பல கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 248 | திகதி 2014.04.18 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

14 37 40 57 F (ஆங்கில எழுத்து)

பரிசுத் தொகை ரூபா. 17,036,980/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 4 | 200,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 125 | 125,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 236 | 236,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 5894 | 353,640/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 3072 | 122,880/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 77733 | 1,554,660/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 11305 | 226,100/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருநுவதன் மூலம் | 17,036,980/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 2,818,280/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 17,189,020/-

2014.04.22ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்


வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/3379) web : www.dlb.lk

முழங்காவிலில் உள்ள நகுலேஸ்வரன் விவசாயியின் விவசாய நிலத்தில் முளைத்த முள்ளங்கி ஒன்று விநாயகரின் முகத்தைப் போல் தோற்றமளிப்பதைக் காணலாம்

பட உதவி-ரமேஸ்


## சிறுநீரகம் தேவை

$B^+$ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தொடர்பு : 0750979195

(C/3399)


# வருடாந்த மஹோற்சவம்

வண்ணார் பண்ணை வடமேற்கு ஆறுகால்மட ஞான வைரவர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

தினமும் முற்பகல் 10.30-12.00 மணிக்கு அபிஷேகமும் மாலை 6 மணிக்கு விசேட பூசை ஆரம்பமாகி தொடரந்து வசந்த மண்டபப் பூசை நடை பெற்று சுவாமி உள்வீதி, வெளி வீதி வலம் வருதலும் இடம் பெறும்.எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதுடன் மாலை 5 மணிக்கு திருக்கல்யாணமும் இடம்பெற்றுதொடர்ந்து சுவாமி கிராம ஊர்வலமும் இடம்பெறவுள்ளது.

(85)

# சர்வோதய கருத்துக்களை பரப்ப பாடுபட்டவர் வேலாயுதபிள்ளை

## ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வகுப்பு வாதத்தை வெறுத்து தேசிய ஒருமைப்பாட்டை விரும்பிய உண்மைக் காந்தியத்தின் உத்தம அடியவரே 'காந்தீயம்' என்று அழைக்கப்பட்ட சி.க.வேலாயுதபிள்ளை. அவர் மகாத்மா காந்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இலங்கையிலே காந்திய சர்வோதய கருத்துக்களைப் பரப்புவதற்கு பெரிதும் பாடுபட்டவராவார் என ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஸ்தாபக தலைவர்களுள் ஒருவரான சி.க.வேலாயுதபிள்ளையின் 21 ஆவது நினைவு தினம் சங்கத்தினால் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. அங்கு அஞ்சலியுரையாற்றிய சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரும் 'காந்தீயம்' ஆசிரியருமான எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத்தலைவர் கா.கார்த்திகேசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான தி.இராசநாயகம் அன்னாரின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அஞ்சலியுரையாற்றிய காந்தீயம் ஆசிரியர் தனதுரையில் மேலும் கூறியதாவது,

காந்திய வழியில் தீண்டாமை ஒழிப்பு, ஆலயப் பிரவேசம், பலி நிறுத்தம், மது ஒழிப்பு என்று தனது சமூகப் பணியை ஆரம்பித்த வேலாயுதபிள்ளை 1949 இல் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தை உருவாக்குவதற்கு பெரிதும் பாடுபட்டார். 1953 இல் நீர்வேலியில் இரண்டு ஏக்கர் நிலத்தை சங்கத்திற்கு வழங்கி முதலாவது சர்வோதய மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தினார்.

தொடர்ந்து 1955 இல் பண்ணாகத்தில் இரண்டாவது சர்வோதய மாநாடு நடைபெறுவதற்கு மூலகாரணமாக இருந்தார். இவரின் பங்களிப்பினால் 1958 இல் உருத்திரபுரத்தில் ஆறு ஏக்கரில் காந்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. நிலையப்பணிகளில் சோ.க.தம்பிப்பிள்ளையும் பெரிதும் ஈடுபட்டு உழைத்தார். கமத்தொழில், கைத்தொழில், பசுவளர்ப்பு, சுதேசிய வைத்தியமுறை என காந்தி நிலையத்தில் பணிகள் விரிவுபெற்றன. தொடர்ந்து 44 ஆண்டுகள் நிர்வாகத்தில் ஓய்வின்றிப் பணிசெய்தார்.

1922 இல் நீர்வேலியில் பிறந்த வேலாயுத பிள்ளையவர்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் கல்வி கற்றபின் இளமையிலேயே சைவத்திற்கும் சமூகத்திற்கும் பணிபுரிய ஆரம்பித்திருந்தார். தூயபிரமச்சாரியாக வாழ்ந்த அவர் சமுதாய மேம்பாட்டுக்கும் சமூக சீர்திருத்தத்திற்கும் காந்தி வழியே உகந்தது எனக்கண்டு முற்போக்கான சமுதாயம் காணத் துடித்தார் என்றார்.

## புனித வியாழன் திருப்பலிப்பூசை

பொலிகை குழந்தை யேசு ஆலயத்தில் புனித வியாழனான கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு இறைவிழாவும் திருச்சடங்கும், திருப்பலிப் பூசையும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தேவாலய பங்குத் தந்தை வண நிருபன் நிஷாந்தின் திருப்பலிப் பூசையினைத் தொடர்ந்து இறையன்பின் கீதம் இசைக்கப்பட்டு ஜெப வழிபாடுகள் இடம்பெற்றன. (116)

# தொழில்நுட்ப அலுவலர் பதவியின் தரம் III இற்கு விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில் நுட்ப அலுவலர் பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

18 - 30 வயதிற்குட்பட்ட இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடிய உடல், உள நலமுடைய நற்பண்புகளுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமையாக க.பொ.த. (சா/த), க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியுடன் தொழில் நுட்பவியலில் டிப்ளோமா பெற்றிருத்தல் அவசியமாகும். பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குட்பட்டது மாகும் விண்ணப்பங்கள் எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிடமுன் கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். (105)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் இளைஞர்களின் பாரம்பரிய கலாசார நிகழ்வான உறி யடி விழா நிகழ்வு புத்தாண்டு தினத்தன்று நடைபெற்றபோது. (50)



# ஐயா வேசம் கலைஞ்சு போச்சு ஐயோ பாவமே... ஐங்கரா!




ஐயோ ஐங்கரநேசா! நாய்வேசம் போட்டால் குலைக்கத்தான் வேணும். அதற்காகக் குப்பைக்குள் நின்றுதான் குலைக்க வேணுமா? அல்லது நாயாகி விட்டால் குப்பையென்ன, கூளமென்ன? எண்டு ஒரு யோசினையோ...!

இல்லையெண்டால், கொஞ்சக் காலத்துக்கு முன், யாழ்ப்பாணத்தில் தண்ணியில்லை. குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு வரப்போகுது... தட்டுப்பாடு வந்திட்டுது.... கிணற்றுத் தண்ணியெல்லாத்திலயும் ஐதரசன் ஏறீட்டுது... எண்டு ஒரு சமூக விஞ்ஞானி கணக்காக அபாய அறிவிப்புகள், ஆராய்ச்சிக் கட்டுரைகளை எல்லோ எழுதிக் கொண்டிருந்தனீங்கள், அப்பு.

அப்ப உங்களை உண்மையில யாழ்ப்பாணத்துச் சனம் கொஞ்சம் நம்பினதுகள். ஒரு நல்ல மனிசன் போல இருக்கு. கொஞ்சம் படிச்சவர். நாலு விசயங்களைப் பற்றி எழுதிறார், பேசிறார் எண்டு உங்களுக்கு மதிப்பும் மரியாதையும் தந்தவை.

இந்த நம்பிக்கையை வைச்சுத்தான் நீங்களும் தேர்தலில் குதிச்சியள்.

நாடாளுமன்றத்தேர்தலில நீங்கள் குதிக்கேக்கையே சிலருக்கு உள்ளுக்குள்ள ஒரு மனச்சுழிப்பு வந்தது. 'உங்களுக்கு ஏனிந்த அரசியல் ஆசையெல்லாம்?' எண்டு. 'ஐங்கரநேசனுக்கு ஏனப்பா இந்த ஆசை வந்திது?'எண்டு வெளிப்படையாகக் கதைச்ச ஆக்களும் இருக்கினம். ஏன், எங்கட யாழ்ப்பாணக் 'கம்பசுக்கையே' அப்பிடிக் கதைச்சவை கனபேர். அதில உங்கட நெருங்கிய – உற்ற நண்பர்களே இருக்கினம். 'உங்கட ரியூட்டரி'யில படிப்பிச்ச – உங்களில நல்ல பட்சமுள்ள வாத்திமாருக்குக் கூட நீங்கள் அரசியல்ல குதிச்சது சுத்தமாக விருப்பமில்லை.

நல்ல மனிசரின் நேர்த்தியோ பிரார்த்தனையோ... கவலையோ தெரியாது, நீங்களும் அந்தத் தேர்தல்ல வெல்ல முடியேல்ல.

ஏனெண்டால், நீங்கள் தேர்தல்ல நிண்ட இடம் பிழை, தமிழ் மக்களுக்கு ஒரு போதுமே சேவை செய்யாத, தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, எந்தச் சமூகத்துக்குமே எண்டைக்கும் நன்மை செய்யிறதைப் பற்றிச் சிந்திக்காத – தாங்களும் தங்கள் சொந்த நலனும், குடும்ப நலனும் எண்டு மட்டுமே செயற்படுகிற, ஒரு சுயநலக்கோட்டைக்குள்ள நீங்கள் ஏன் வலியப்போய்த் தலையைக் குடுக்கிறியள் எண்ட கவலைதான், எல்லாருக்கும்...

இதை வேற மாதிரிப் பார்த்தவையும் உண்டு. 'இப்பிடிச் சுற்றுச்சூழல் சுகாதாரம் விவசாயம் எண்டு பேசிற ஆக்கள் கூட்டமைப்புக்குள்ள போனால், அதின்ர குணாங்குறியில, இயல்பில கொஞ்சமாவது மாற்றங்கள் வரலாம். அப்பிடி வந்தால் தமிழ்ச்சனங்களுக்கு நல்லதுதானே.... ஆகையால் அதை நாங்கள் ஊக்கப்படுத்தலாம்' எண்ட மாதிரியும்...

இப்படி நினைச்சுக்கொண்டுதான் நீங்கள் மாகாணசபைத் தேர்தலில் குதிச்சபோது, உங்களுக்குத் தங்கட ஆதரவைத் தந்தவை. சிலபேர் வெளிப்படையாகவே உங்களுக்காக நிண்டு தேர்தல் வேலையெல்லாம் செய்தவை.

ஆனால், தாங்கள் 'நினைச்சதெல்லாம் சுத்தமான பிழை' எண்டு இப்ப இவை தங்கட நாக்கையே கடிக்கினம்.

நீங்கள் மாகாணசபைத் தேர்தலில் வெற்றியடைஞ்ச உடனயே, போட்ட வேசமெல்லாம் தெரிஞ்சிட்டுது...

உங்களப்பற்றி 'கனக்க எதிர்பார்த்த' ஆட்களுக்கு நீங்கள் ஒரு 'டம்மி வெடி'தான் எண்டு கடுமையான ஏமாற்றம். பெரிய பெரிய உத்தியோகத்தர்மார், படிச்ச ஆட்கள் எல்லாம் நீங்கள் விவசாய அமைச்சராக (இந்த அமைச்சைப் பெற நீங்கள் அடிச்ச குத்துக்கரணங்கள் ஒருபக்கம் இருக்கட்டும்) வந்த உடன, நல்ல காரியங்கள் சிலது நடக்கலாம் எண்டு நினைச்சவை.

ஆனால், நீங்கள் வந்து 'கொக்காக் கோலாவைக் குடியாதையுங்கோ', 'விஜயின் படத்தைப் பார்க்காதையுங்கோ', எண்டு தொடங்கி, முதலமைச்சரைப் புல்லுப்பிடுங்கக் கூப்பிட்டுப் படமெடுத்ததையும் நாலு இடங்களில அவசர அவசரமாக பாலங்களைத் திறந்து, கட்டிடங்களின் நாடாவை வெட்டினதோட, அப்பிடியே மாவீரர் நாளுக்கு மரம் நடவேணும் எண்டு ஐயாயிரமோ ஐம்பதினாயிரமோ மரக்கண்டுகளை நட்டுப் போட்ட கூத்துக் கொஞ்சமல்ல.

இதில உச்சக் கட்டம், உங்களுக்கு வந்த மாவீரர் மீதான பாசம்தான் அப்பு. என்ன ஒரு நடிப்பு.. என்ன ஒரு நாடகம்....!

ஆனால், இதைச் சுரேஸ் (சுரேஸ் பிரேமச்சந்திரன்) அண்ணை கடுமையாக மறுக்கிறார். 'நன்றிக்கும் ஐங்கரநேசனுக்கும் சம்பந்தமேயில்லை. அப்பிடியிருக்கேக்கை நீங்கள் இப்பிடியெல்லாம் கதைக்கப்பிடாது' எண்டு.

சரி, அத விடுவம். இதெல்லாம் உள் வீட்டுப் பிரச்சினை. அது மட்டுமில்லை, இவர் சுரேஸ் அண்ணை மட்டும் என்ன நன்றியோடயா இந்தத் தமிழ்ச்சனங்களோட நடந்து கொள்ளுறார்? அல்லது தன்னோட கூட இருந்து போராடின, தனக்கு உதவின பெடியள மறக்காமலா இருக்கிறார்?...

(ஐயோ, ஐங்கரநேசா!) இரணைமடுத்தண்ணியை யாழ்ப்பாணம் கொண்டு வந்தால் உண்ணாவிரதம் இருப்பேன் எண்ட றேஞ்சில ஸ்ரண்ட் அடிக்கிறியள்... யாழ்ப்பாணத்தில தாராளமாக நல்ல தண்ணி இருக்கெண்டு அடிச்சுச் சத்தியம் செய்யிறியள்...

'சேராத இடம் சேர்ந்து விட்டான்... கர்ணன்... வஞ்சத்தில் வீழ்ந்தானடா...' எண்டு பாடவோ இல்லாட்டிக்கு 'கைகொட்டிச் சிரிப்பார்கள்... ஊரார் சிரிப்பார்கள்... விளையாட்டுத் தீர்மானமே... பெரும் விபரீத விளைவாகுமே...' எண்டு பாடவோ..

நம்பிக்கையுடன் இருக்கும்போது எந்தக் காரியமும் கடினமாகத் தெரிவதில்லை. - ஜோன்ரேட்


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com


## புத்திஜீவிகள் என்ன செய்கிறார்கள்?

அழகான சூ:.பி கதை ஒன்று உண்டு. ஒரு கிராமத்தில் இரண்டு கிணறுகள் இருந்தன. ஒன்று அரண்மனையில் இருந்தது. அதை மந்திரியும் அரச குடும்பத்தினரையும் தவிர வேறு யாரும் உபயோகிக்க முடியாது. மற்றொன்று ஊரின் நடுவே இருந்தது. அதை மற்ற அனைவரும் உபயோகித்தனர்.

ஒருநாள், ஒரு மந்திரவாதி அந்த ஊருக்கு வந்து சில மந்திரங்களை கூறிக்கொண்டே ஏதோ ஒன்றை அந்த பொதுக் கிணற்றினுள் போட்டான். பின்னர், இந்த கிணற்றிலிருந்து தண்ணீர் பருகுபவர் யாராயிருந்தாலும் அவர்கள் பைத்தியமாகி விடுவர் என்று கூறிவிட்டு மறைந்துவிட்டான்.

தாங்கள் பைத்தியமாகி விடுவோம் என தெரிந்தபோதிலும் மக்கள் வேறு வழியில்லாமல் அந்த தண்ணீரையே குடித்தனர். சூரியன் மறையும்போது அந்த ஊரில் அனைவருக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது. ராஜா, ராணி, இளவரசன், மந்திரி ஆகியோரைத் தவிர தலைநகர் முழுமைக்கும் பைத்தியம் பிடித்துவிட்டது.

என்ன செய்வது? எல்லோரும் பைத்தியமாகிவிட்டதால் சரி பிழையை எடுத்துச் சொல்ல யாராலும் அங்கு முடியவில்லை! ஊரே பைத்திய நிலையில் இருப்பதைக் கண்டு, ஊர்க்கிணற்றுத் தண்ணியைக் குடிக்காத மந்திரியும் அரச குடும்பத்தினரும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ஒரு வித்தியாசமான விஷயம் நடந்தது.

நகர் முழுவதும் அரசரும் மந்திரியும் வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தது. எனவே அரச குடும்பத்தினர்தான் பைத்தியமாகிவிட்டனர் என்ற வதந்தி பரவியது. அரசரும் குடும்பமும் நம்மைப் போல இல்லை எனும் விஷயத்தில் எல்லோரும் ஒன்றுபட்டனர்.

எல்லோரும் சேர்ந்து கூடி கூத்தாடிக் கொண்டு, "நாங்கள் எங்களைப் போலவே இருப்பவரையே அரசராக தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம், மரியாதையாக வெளியே வாருங்கள்... நீங்களும் எங்களைப்போல் இயல்பாகி விடுங்கள்!" என அரண்மனை முன்நின்று கூக்குரலிட்டனர்.

அரசர், மந்திரியிடம், "என்ன செய்வது? நாமும் இவர்களைப் போல் ஆகாவிட்டால், நம்மை நகரிலிருந்தே வெளியேற்றி விடுவார்கள் போலிருக்கிறதே!" என்று கேட்டார். மந்திரி விவேகமுள்ளவர், அவர், "ஒரே ஒரு வழிதான் உள்ளது! அவர்கள் தண்ணீர் பருகிய அந்த கிணற்றிலிருந்தே தண்ணீர் எடுத்து குடித்து நாமும் பைத்தியமாகி விட வேண்டியதுதான். இல்லாவிடில் இந்த பைத்தியக்கார கும்பல் நம்மை கொன்றுவிடும்." என்றார்.

அரசரும் மந்திரியும் குடும்பத்தினரும் பின்வாசல் வழியே ஓடினர். மந்திரவாதியால் பாழ்பட்ட அந்த கிணற்று தண்ணீரைக் குடித்தனர். பின் ஊர்மக்களைப் போலவே, ஆவேசமாய்க் கத்திக் கொண்டும், குதித்துக் கூத்தாடிக் கொண்டும், அந்த மக்களுடனேயே சென்று கலந்தனர்.

"இப்போது ஊரில் ஏகப்பெரும்பான்மையாக அனைவருமே இயல்பு நிலையடைந்து விட்டனர்" என்று மிகவும் கோலாகலமாக இருந்தது அந்த ஊர். இதுதான் அந்த சூ:.பி கதை.

உண்மையைப் பேசினால் துரோகப் பட்டம் கிடைத்துவிடுமோ என்று பயந்து, ஊரோடு ஒத்தோடும் தமிழ்ப் புத்திஜீவிகளுக்கு இந்தக் கதை என்ன சொல்கிறது என்பது நன்கு புரியும்.

அல்லாவிட்டால், ஆண்டுக்காண்டு ஜெனிவாத் திருவிழாவையும் சர்வதேச வருகையையும் குறிசொல்வது போல மக்களுக்குச் சொல்லிக்கொண்டு, இங்கு தீர்வுக்கான முயற்சி எப்பனும் நகரவிடாமல் பார்த்துக்கொள்கிறவர்களை எதிர்த்துக் கேள்வியெழுப்பாமல், அதே பக்கத்திற்கு இவர்களும் சும்மா குறிசுட்டுக் கொண்டிருப்பதற்கு என்ன அர்த்தம்?

-ஆசிரியர்.

# இருதய நோயாளர் மரணம்; தடுக்க புதிய தொழில்நுட்பம்

(கொழும்பு)

நாள் தோறும் இருதய நோய்களினால் 125 முதல் 150 பேர் வரையில் நாடு முழுவதும் உயிரிழப்பதாக இருதய நோய் தொடர்பான நிபுணத்துவ மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த மரணங்களைத்தடுப்பதற்கு விசேட தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

புதிய தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து மருத்துவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளது. இந்தியா, பிரான்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்த நிபுணத்துவ மருத்துவர்களின் ஒத்துழைப்புடன் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கெட்டுப் போகிறது சுகாதாரம் கொழும்பில் எலித்தொல்லை அதிகம்

(கொழும்பு)

கொழும்பில் எலிகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதனால் அதனைக்கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கொழும்பு மாநகரசபை சுகாதாரத் தலைமை மருத்துவ அதிகாரி பிரதீப் காரியவசம் தெரிவித்தார்.

எமது கூடியளவான தொழிலாளர்கள் தற்போது டெங்கு ஒழிப்புத்திட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் எம்மால் இதனை முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது. எனினும் எலிகளை ஒழிப்பதற்கான இத்திட்டத்தினை மேற்கொள்வதற்கு கூடிய சீக்கிரம் ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் கோட்டை, துறைமுகம், பொரளை மற்றும் மருதானை ஆகிய இடங்களில் அமைந்துள்ள சுகாதாரமற்ற உணவகம், சரக்கு கப்பல் மற்றும் கிடங்குகளிலேயே எலிகளின் இனப்பெருக்கம் அதிகமாக காணப்படுகின்றது. எலிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவில்லையாயின் எலிகளினால் ஏற்படும் மஞ்சல் காமாலை, எலிக்காய்ச்சல் உள்ளிட்ட பல்வேறு வகையான நோய்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகாமாக உள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த வருடத்தில் கொழும்பில் மாத்திரம் மஞ்சல்காமாலை நோயினால் 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் பதிவாகியுள்ளன. மேலும் நாடு பூராகவும் மார்ச் மாதத்தில் 708 பேரும் ஏப்ரல் மாதத்தில் 221 பேரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூறையடிப் பகுதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணி அளவில் சூறையடி அதிசயப் பிள்ளையார் ஆலய வீதியின் தோணா நீரோடையில் இருந்தே இந்தச் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் சூறையடியைச்சேர்ந்த ஞா.மகாலிங்கம் (வயது-70) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

# யானைகளைப் பாதுகாக்க புதிய செயற்றிட்டம்

(கொழும்பு)

நாட்டில் வருடாந்தம் உயிரிழக்கும் யானைகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைகளம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வருடாந்தம் மனிதர்களின் செயற்பாடு காரணமாக, சுமார் 250 யானைகள் உயிரிழப்பதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச். டீ.ரத்நாயக்க தெரிவித்தார்.

ஆயினும், கடந்த வருடம் இந்த எண்ணிக்கையை 208 ஆக கட்டுப்படுத்த முடிந்ததாக அவர் கூறினார்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து புதிய செயற்றிட்டத்தை முன்னெடுத்த நடவடிக்கைகளினால் உயிரிழக்கும் யானைகளின் எண்ணிக்கையை குறைக்க முடிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, யானைகளை பாதுகாப்பதற்கு அனைத்து மக்களினதும் ஒத்துழைப்பு முக்கியமானது என வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் காமினி விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

# தலைமன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வரும் நோயாளர் அவதி

## மகப்பேற்று விடுதி மருத்துவரால் ஆக்கிரமிப்பு

தலைமன்னார் வைத்தியசாலையின் புதிய மகப்பேற்று விடுதியை, வைத்திய அதிகாரி தனது வசிப்பிடமாக 2009ஆம் ஆண்டு முதல் பாவித்து வருவதாக தலைமன்னார் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னார் வைத்தியசாலையில் தென்பகுதியைச் சேர்ந்த வைத்திய அதிகாரி கடமையாற்றி வருகின்றார். தலைமன்னார் பொது வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி உடைந்து விழுந்து கொண்டிருக்கும் நிலையிலும், மழைக்கு ஒழுகிக் கொண்டிருக்கும் பழைய கட்டடத்தில்தான் 2009ஆம் ஆண்டு முதல கர்ப்பிணிப்பெண்களும் அனுமதிக்கப்படுகின்றனர். குழந்தைகளும் அங்கேயே பிறக்கின்றன.

வடக்கு கிழக்கை தவிர்த்து இலங்கையின் எந்த ஒரு மாவட்டத்திலாவது ஒரு சம்பவம் இப்படி நடந்தால் மேலதிகாரிகள், அரசியல்வாதிகள் இப்படித்தான் மௌனம் காத்து, இவ்வாறான செயற்பாட்டினை அனுமதிப்பார்களா? என அந்த மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

உடனடியாக உரிய அதிகாரிகள், அரசியல்வாதிகள், செயற்பட்டு பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும், அதன் தாயையும், அனுமதிக்கப்படும் கர்ப்பிணிப் பெண்களையும் சுகாதாரமான, பாதுகாப்பான, தரமான அதற்குரிய விடுதியில் சிகிச்சைகளைப் பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

உயர் அதிகாரிகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு ஆடம்பரமான சொகுசு வாழ்க்கை, ஆனால் சாதாரண எங்களைப்போன்ற மக்களுக்கு அடிப்படை வசதிகளற்ற பாதுகாப்பற்ற துர்நாற்றம் வீசும், கூரைகள் உடைந்து தொங்கிக் கொண்டிருக்கும், மழைக்கு ஒழுகிக்கொண்ருக்கும் பழைய கட்டடமா?

பளிங்கு கற்களால் ஆன கல்லறை போன்று வெளியே பிரகாசமாகவும், உள்ளே அருவருக்கத்தக்க நிலையில் காணப்படும் தலைமன்னார் வைத்தியசாலையில், நோயாளிகள் செருப்பு அணிந்து உள்ளே போகக் கூடாது, ஒருவர் ஒருவருடன் கதைக்கக் கூடாது, தும்மல், இருமல் வந்தால் உடனடியாக வெளியேறிவிடவேண்டும், பிள்ளைகள் அழுதால் உடனடியாக வெளியே கொண்டு சென்றுவிட வேண்டும், சிறு பிள்ளைகள், குழந்தைகள் சிறு நீர், மலம் கழித்தால் கடுமையான பேச்சுக்கள் விழும், ஜன்னல்களைத் திறக்க மாட்டார்கள், மலசல கூடம் இல்லை, கதவில் கைவைக்கக்கூடாது, பகல் 12.00 மணியின் பின்னர் நோயாளர்களை வாகனங்களில் உள்ளே கொண்டு செல்வதற்கு காவலாளியிடம் நோயைக் கூறவேண்டும் அவர் ஊழியரிடம் கூறி, ஊழியர் வைத்தியரிடம் கூறி அனுமதி பெற வேண்டும்.

முன்னர் பல தடவை இவை தொடர்பாக நேரடியாகவும், கடிதங்கள் மூலமாகவும் உயர் அதிகாரிகளுக்கும், மாகாண மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்தும் எந்தப்பயனும் ஏற்படவில்லை என்றும் அப்பகுதி மக்கள் ஏக்கத்துடன் தெரிவித்தனர்.

# கூட்டமைப்புத் தலைமையின் பாசாங்கு அரசியல்



சங்கர சிவன்

**கூட்டமைப்புத் தலைவர்களின் அரசியல் தீர்வுச் செயற்பாடு வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு அந்த நாட்டுத் தலைவர்களுடன் பேசுவதுடனும், சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதுடனும் மட்டுப்பட்டிருக்கின்றது. தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கினால் அடுத்த கணம் சர்வதேச சமூகம் தீர்வுக்கான செயற்பாட்டை ஆரம்பிக்கும் என்று ஒவ்வொரு தேர்தலின்போதும் கூறினார்கள். தேர்தல்களில் தமிழ் மக்கள் கூட்டமைப்பை ஆதரித்தார்கள். ஆனால், சர்வதேச சமூகத்தின் நிழலைக்கூடக் காணோம்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தென்னாபிரிக்காவுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இனப்பிரச்சினையின் தீர்வுக்காகவே இந்த விஜயத்தை மேற்கொண்டதாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் மாத்திரமன்றி அவர்களுக்குச் சார்பான ஊடகங்களும் கூறின. ஆனால், எதுவும் நடந்ததாகவோ நடக்கப்போவதாகவோ தெரியவில்லை. இது கூட்டமைப்புத் தலைவர்களின் முதலாவது வெளிநாட்டுப் பயணமல்ல. இதற்கு முன்னரும் இந்தியா உட்படப் பல வெளிநாடுகளுக்குப் போய் வந்திருக்கின்றார்கள். ஒவ்வொரு வெளிநாட்டுப் பிரயாணத்தின்போதும் இனப்பிரச்சினையின் தீர்வுக்காகவே அந்த பிரயாணத்தை மேற்கொள்வதாகக் கூறுவது இவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. ஆனால், இனப்பிரச்சினையின் தீர்வை நோக்கிய எந்தவொரு நகர்வும் இவர்கள் தரப்பிலோ இவர்கள் சென்று வந்த நாடுகள் தரப்பிலோ இதுவரை இடம்பெறவில்லை. எண்ணெய்ச் செலவேயொழிய பிள்ளை வளர்ச்சி இல்லை என்ற முதுமொழி போல் ஆகிவிட்டது தமிழ் அரசியல்.

தலைவர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போய் அரசியல் தலைவர்களையும், சிவில் சமூக முக்கியஸ்தர்களையும் சந்தித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தரும்படி கோரிக்கை விடுத்த போதிலும் உருப்படியாக எதுவுமே நடக்காததற்கான காரணம் என்ன என்பது பற்றித் தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

கூட்டமைப்புத் தலைவர்களின் அரசியல் தீர்வுச் செயற்பாடு வெளிநாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டு அந்த நாட்டுத் தலைவர்களுடன் பேசுவதுடனும், சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதுடனும் மட்டுப்பட்டிருக்கின்றது. அரசியல் தீர்வில் கருத்தீடுபாடு கொண்ட செயற்பாடுகளாக இவற்றைக் கருத முடியாது. எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லாமலே வெளிநாட்டுத் தலைவர்களின் உதவியைக் கோருகின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று இவர்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றபோதிலும் சர்வதேச சமூகம் அரசியல் தீர்வுக்கான எந்த முயற்சியையும் இதுவரை எடுக்கவில்லை.

சர்வதேச சமூகம் பற்றி நான்கு வருடங்களாகக் கூட்டமைப்புத் தலைவர்கள் கூறியது எதுவும் நடக்கவில்லை. தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கினால் அடுத்த கணம் சர்வதேச சமூகம் தீர்வுக்கான செயற்பாட்டை ஆரம்பிக்கும் என்று ஒவ்வொரு தேர்தலின்போதும் கூறினார்கள். தேர்தல்களில் தமிழ் மக்கள் கூட்டமைப்பை ஆதரித்தார்கள். ஆனால், சர்வதேச சமூகத்தின் நிழலைக்கூடக் காணோம். கூட்டமைப்பின் வெளிநாட்டுப் பிரயாணங்களும் சர்வதேச சமூகம் பற்றிய கதையும் தமிழ் மக்களை ஏமாற்றுவ[illegible]ற்கான முயற்சிகள் என்ற முடிவுக்கே வர வேண்டியுள்ளது.

தெளிவான தீர்வு இலக்கு, சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தும் திறமை, யதார்த்தத்துக்கு அமைவான செயற்பாடு என்பன இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியில் பிரதானமானவை. முன்னைய தலைவர்கள் இவ்விடயங்களில் தவறு விட்டதன் விளைவாகவே இனப்பிரச்சினை இன்று வரை தீர்வின்றித் தொடர்கின்றது. அத்தலைவர்கள் தங்கள் தவறை ஒருபோதும் ஒத்துக்கொண்டதில்லை. இனப்பிரச்சினை தீராமலிருப்பதற்கான முழுப் பொறுப்பையும் சிங்களத் தலைவர்கள் மேல் போட்டார்கள். சிங்கள அரசாங்கங்கள் ஒருபோதும் தீர்வைப் தரப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டே நாடாளுமன்றத்துக்குப் போவதற்காக மல்லுக்கட்டினார்கள். இதே சிங்கள அரசாங்கங்கள் தான் இந்திய வம்சாவழியினரின் பிரசாவுரிமைப் பிரச்சினையையும் வாக்குரிமைப் பிரச்சினையையும் தீர்த்து வைத்தன என்பதை மக்களுக்குச் சொல்வதில்லை. சிங்கள அரசியல் தலைவர்கள் தவறு விடவில்லை என்று சொல்ல வரவில்லை. தமிழ்த் தலைவர்கள் மோசமான தவறுகளை விட்டிருக்கின்றார்கள். தீர்வுக் கோரிக்கையை உரிய முறையில் முன்னெடுக்காமல் தேர்தல் வெற்றிக்கான அரசியல் கோஷமாக மாத்திரம் பயன்படுத்தினார்கள். சமஷ்டிக் கோரிக்கை தோல்வி அடைந்ததற்கு இதுவே பிரதான காரணம். அரசியல் தீர்வை நோக்கிச் செல்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தாமல் கைநழுவ விட்டார்கள். யதார்த்தத்துக்கு முரணாகவே செயற்பாடுகளை வகுத்தார்கள். இவ்வாறான தவறுகளின் விளைவாகவே இனப்பிரச்சினை தீர்வின்றித் தொடர்கின்றது.

முன்னைய தலைவர்கள் விட்ட அதே தவறுகளையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களும் விடுகின்றார்கள். அன்றைய தலைவர்கள் பெயருக்காவது ஒரு தீர்வை முன்வைத்தார்கள். இன்றைய தலைவர்களிடம் தீர்வு இல்லை. சும்மா காலங்கடத்துகின்றார்கள். தீர்வு இலக்கை வெளிப்படுத்தாமல் வெளிநாடுகளிடம் உதவி கோருவதைப் போன்ற கோமாளித்தனம் வேறெதுவுமில்லை. எந்தத் தீர்வுக்காக வெளிநாடுகள் செயற்படுவது? சர்வதேச சமூகத் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறுவதும் இதைப் போன்றதே. எந்தத் தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுத் தருவது? இந்தக் கேள்விகளுக்காவது கூட்டமைப்புத் தலைவர்கள் பதில் கூறுவார்களா?

இங்கே தான் கூட்டமைப்பின் அரசியல் நேர்மை கேள்விக்கு உள்ளாகின்றது. தீர்வுக் கோரிக்கையை முன்வைக்காமல் வெளிநாடுகளிடம் வேண்டுகோள் விடுப்பதில் அர்த்தமில்லை. ஆனால், கூட்டமைப்புத் தலைவர்கள் வெளிநாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றார்கள். தீர்வு எது என்று

**இத்தலைவர்கள் தங்கள் தவறை ஒருபோதும் ஒத்துக்கொண்டதில்லை. இனப்பிரச்சினை தீராமலிருப்பதற்கான முழுப் பொறுப்பையும் சிங்களத் தலைவர்கள் மேல் போட்டார்கள். சிங்கள அரசாங்கங்கள் ஒருபோதும் தீர்வைப் தரப்போவதில்லை என்று சொல்லிக்கொண்டே நாடாளுமன்றத்துக்குப் போவதற்காக மல்லுக்கட்டினார்கள்.**

கூறாமல் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஆனால், சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் சொல்கின்றார்கள். தீர்வில் உண்மையான அக்கறை இல்லாமல் தீர்வுக்காக முயற்சிப்பதாக மக்களுக்குப் பாசாங்கு காட்டும் நேர்மையீன அரசியல் என்று தானே இதைச் சொல்ல வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் தீர்வில் அக்கறை இல்லை என்பதற்குப் பல ஆதாரங்களைக் காட்டலாம். தீர்வுக் கொள்கை எதுவும் இல்லாத அமைப்பாகக் கூட்டமைப்பு இருப்பது முதலாவது ஆதாரம். எந்தத் தீர்வையும் உத்தியோகபூர்வமாக வெளியிடும் திராணி கூட்டமைப்புக்கு இல்லை. தலைவர்களிடையே உடன்பாடு இல்லாததால் வெளிநாடுகளுக்குக் காவடி தூக்கியும் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூறியும் மக்களை ஏமாற்றுகின்றார்கள்.

அரசியல் தீர்வை நோக்கிச் செல்வதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களைச் சரியான முறையில் பயன்படுத்தாமை மற்றைய ஆதாரம். நாடாளுமன்றத் தெரிவுக் குழு அரசியல் தீர்வு முயற்சியை முன்னெடுப்பதற்குக் கிடைத்திருக்கும் ஒரு சந்தர்ப்பம். இந்தத் தெரிவுக் குழுவின் மூலம் இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வைப் பெறலாம் என்று எவரும் கூற முடியாது. ஆனால், இக்குழுவில் பங்குபற்றி அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைப்பதன் மூலம் சில சாதகமான விளைவுகள் ஏற்பட இடமுண்டு. பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைப் பெறுவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம். அது சாத்தியமாகாவிட்டாலும் அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகள் பரந்துபட்ட விவாதத்துக்கு உள்ளாவது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சிப்போக்கு. எல்லாவற்றுக்கும் மேலாக, ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளைத் தமிழ்த் தலைமை முன்வைப்பது தென்னிலங்கையில் அரசியல் தீர்வுக்குச் சாதகமான நிலையைத் தோற்றுவிப்பதற்குப் பெரிதும் உதவும்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதால் தமிழ் மக்கள் இழக்கப்போவது எதுவுமில்லை. சில நன்மைகள் கிடைப்பதற்கு இடமுண்டு. அப்படியிருக்க நொண்டிச் சாட்டுகள் கூறிக் கூட்டமைப்பு நிராகரிப்பதற்கான உண்மைக் காரணம் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைப்பதற்கு இவர்களிடம் கொள்கைத் திட்டம் எதுவும் இல்லை என்பதாகும். அரசியல் தீர்வை நிராகரிக்கும் வகையில் செயற்படுபவர்கள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குப் போய் எதைச் சொல்வது?

வடமாகாண சபையைச் சரியான முறையில் இயக்காமல் அதை முடக்கும் வகையில் செயற்படுவது அரசியல் தீர்வில் கூட்டமைப்புக்கு அக்கறை இல்லை என்பதற்கு இன்னொரு உதாரணம். அரசியல் தீர்வை ஒரே தடவையில் பெற முடியாதென்பது இன்றைய யதார்த்தம். மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக ஏற்றுப் படிப்படியாக மேலதிகமான அதிகாரங்களைப் பெற்று முழுமையான அரசியல் தீர்வை அடைவது தான் சரியான அணுகுமுறை. அந்த வளர்ச்சிப்போக்கு இடம்பெறாமல் தவிர்ப்பதற்காகவே கூட்ட்மைப்புத் தலைமை பொருத்தமற்ற காரணங்களைக் கூறி மாகாண சபையின் செயற்பாட்டை முடக்குகின்றது.

அரசியல் தீர்வைத் தவிர்க்கும் வகையிலேயே கூட்டமைப்பு திட்டமிட்டுச் செயற்படுகின்றது என்பதை மேலே பார்த்தோம். அரசியல் தீர்வுக்கு முயற்சிப்பதாகத் தோற்றம் காட்டிக் கொண்டு அரசியல் தீர்வை நிராகரிக்கும் வகையில் கூட்டமைப்பு செயற்படுவதற்கான காரணத்தைத் தமிழ் மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். புலி சார்ப்புப் புலம் பெயர் அமைப்புகள் இலங்கையில் அரசியல் தீர்வுக்குச் சாதகமான நிலை உருவாகுவதை விரும்பவில்லை. அவை இப்போதும் தனிநாட்டுக் கனவிலேயே மிதக்கின்றன. கூட்டமைப்பின் நிதி வளத்தில் பெரும் பகுதி இந்தப் புலம் பெயர் அமைப்புக்களால் வழங்கப்படுகின்றது. இந்த நிலையில் அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகுவதற்கு இடமளிக்கக்கூடாது என்ற புலம் பெயர் அமைப்புகளின் கட்டளையைக் கூட்டமைப்பால் மீற முடியவில்லை.

# ஆசியாவின் புலனாய்வு அமைப்புகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## நேசக்கரம் நீட்டுகிறார் கோத்தா

(கொழும்பு)

பயங்கரவாதம் உட்பட அனைத்து சவால்களையும் முறியடிக்க ஆசிய நாடுகளின் புலனாய்வுத்துறைகள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் வரையில் இலங்கை அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வந்த, மிகப் பெரிய பயங்கரவாத இயக்கமான புலிகளை நாம் யுத்த முனையில் வென்றதன் மூலம் முழு உலக நாடுகளுக்கும் எவ்விதம் பயங்கரவாத இயக்கங்களை துவம்சம் செய்ய முடியும் என்பதை கற்றுக் கொடுத்தோம் எனவும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரான கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் நடைபெற்ற 14 ஆவது ஆசிய பாதுகாப்புச் சேவைகள் மாநாடு மற்றும் கண்காட்சியின் ஒரு அங்கமாக இடம்பெற்ற 2014 புத்த ஜாயா பேரவையில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர், புலிகள் இயக்கம் நாட்டில் இன ரீதியிலான இனத்து வேசங்களை வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள மக்கள் மத்தியில் பரப்பியதன் மூலம் தங்களது ஆயுதப் போராட்டத்துக்கு அரசியல் ஆதரவையும், பெருமளவு நிதி உதவியையும் வெளி நாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளும் தந்திரோபாயத்தை கைப்பற்றி வநதது என்று சுட்டிக்காட்டினார்.

புலம் பெயர்ந்த புலிகள் ஆதரவு தமிழர்கள் மத்தியில் உள்ள தீவிரவாதப் போக்குடையவர்களின் ஆதரவுடன் சுமார் 30 நாடுகளில் எல்ரி.ரி.ஈ தன் கிளைகளை அமைத்து நிதி உதவியையும், அரசியல் ஆதரவையும் திரட்டி வந்தது என்றும் அவர் கூறினார்.

1993 முதல் 2002 ஆம் ஆண்டு வரையில் எல்.ரி.ரி.ஈ உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் முதல 75 மில்லியன் அமெரிக்க டொலர் வரையில் திரட்டியது என்றும் 2002 முதல் 2008 வரையில் இவ்வியக்கம் வருடாந்தம் 200 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொண்டது என்றும் தெரிவித்தார்.

திட்டமிட்ட பிரசாரங்களின் மூலமும் மனிதர்களிடம் இருந்து பலவந்தமாக பணத்தை அபகரிப்பதன் மூலமும் பல்வேறு வங்கி மோசடிகள் போதைப் பொருள் கடத்தல் மற்றும் மக்களை சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு கடத்திச் செலலுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் கோடான கோடி டொலர்களை சம்பாதித்ததாகவும கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மக்களை வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக கடத்திச்சென்று கொள்ளை இலாபம் திரட்டுவோரின் கொட்டத்தை அடக்குவதற்காக இலங்கையும் அவுஸ்ரேலியாவும் ஒன்றிணைந்து எடுத்து வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இப்போது நல்ல வெற்றி அடைந்து வருவதாகவும் இதன் மூலம் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து அவுஸ்ரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு சட்ட விரோதமாகச் செல்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள்



ஓரளவு கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

நிலத்தில் மட்டுமல்ல ஆழ் கடலிலும் மக்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு ஒவ்வொரு தேசத்தினதும் கடற்படையினரும் மனம் உவந்து செயற்படுவது அவசியம் என்றும் அதன் மூலம் பயங்கரவாதிகளை அடக்கியது போன்று கடற்கொள்ளைக் காரர்களையும் அடக்கிவிட முடியும் என்றும் பாதுகாப்பு செயலாளர் தமது உரையில் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு இப்போது நடக்கிறது ஜோதிட ஆலோசனை

(கொழும்பு)

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஊவா மாகாணசபைத் தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன.

ஊவா தேர்தல்களைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள காண்பப்படுவதாக கொழுமபு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது:

ஜனாதிபதியின் கிரக நிலைக்கு அமைய 2015 ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னரே தேர்தல் நடாத்த வேண்டுமென சிரேஷ்ட ஜோதிடரும், ஜனாதிபதியின் ஜோதிட ஆலோசகருமான தேசபந்து சுமனதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றியீட்டக் கூடிய சாத்தியங்கள் அதிகம் எனக்குறிப்பிட்டுள்ளார்.

## புலம்பெயர் அமைப்புக்களுக்கு எதிராக இராஜதந்திர யுத்தம் ஆரம்பம்


அரசினால் தடை செய்யப்பட்ட புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் தொடர்பாக சர்வதேச அளவிலான பிரசார யுத்தத்தை அரசு இப்போது ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருப்பதாகக் கூறப்படும் 16 அமைப்புக்கள் மீதான தடை குறித்து கொழும்பிலுள்ள வெளி நாட்டு உயர் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.

இதன்படி வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் எதிர்வரும் வியாழக்கிழமை நாட்டிலுள்ள வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளிட்ட 16 அமைப்புக்கள் இம்மாதம் இலங்கை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ளன.

## வாகன உற்பத்தி ஆலை திறந்து வைத்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

வாகனங்கள் உற்பத்தி செய்யும் இலங்கையின் முதலாவது மைக்ரோ தொழிற்சாலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பொல்கஹவல தொழில் பேட்டையில் திறந்துவைத்துள்ளார்.

அத்துடன் தொழிற்சாலையையும் ஜனாதிபதி சுற்றிப் பார்வையிட்டார். மைக்ரோ நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லோரன்ஸ் பெரேரா தமது நிறுவனத்தின் புதிய உற்பத்தியான "டுவர் வெகன்" வாகனத்தை ஜனாதிபதிக்கு உத்தியோக பூர்வமாக கையளித்தார். பங்களாதேஸுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ள மைக்ரோ வாகனங்கள் தொடர்பான ஆவணங்களையும் அவர் ஜனாதிபதியின் பார்வைக்குச் சமர்ப்பித்தார்.

இந்த நிகழ்வில் பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் சரத் அமுனுகம, கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## ஆஸி.யில் நிபந்தனை வீசா மீள் புதுப்பிக்க ஏற்பாடு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் மீண்டும் புகலிட கோரிக்கையாளர்களுக்கு 1 வருடத்துக்கு நிபந்தனை அடிப்படை TPrhthd Bridging Visa Conditions வீசா வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முதல் வந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் வீசாக்கள் முடிவடைந்த நிலையில் பலருக்கு இதுவரைக்கும் வீசா புதுப்பிக்கப்படாத நிலையில் இருக்கின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள BVC என்னும் நிபந்தனை அடிப்படையிலான வீசாவில் பல பிரச்சினைகள் உள்ளதால் எதிர்க்கட்சிகள், வழக்கறிஞர்கள், அகதி செயற்பட்டாளர்கள் என பல தரப்பு செயற்பாட்டாளர்களும் இந்த வீசாவை மாற்ற கோரி பல எதிர்ப்புகளைத் தெரிவித்தனர்.

கடந்த மாதம் செனட் சபையிலும் நிரந்தர வதிவிட வீசா வழங்குவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையிலும் டோனி அபட் அரசாங்கம் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில அவர்களுடைய கடும்போக்கு தன்மையைக் கைவிடவில்லை.

மீண்டும் புகலிட கோரிக்கையாளர்களுக்கு 1 வருடத்துக்கு நிபந்தனை அடிப்படை வீசாவான BVE வீசாவே வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலிய அரசாங்கம் மீண்டும் புகலிடக் கோரிக்கையாளர்களை நடாத்தும் விதம் மிகவும் கவலை அளிப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

## அம்பாந்தோட்டைத் தாக்குதல் அசாத்சாலி கடும் கண்டனம்

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுமீது அம்பாந்தோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல்கள் மிகவும் கவலைக்குரியதென தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

நாட்டின் முக்கியஸ்தர்களுக்கு இவ்வாறான தாக்குதல்கள் காணபபடுமாயின் பொது மக்களின் நிலை தொடர்பில் கூறுவதற்கு ஒனறும் இல்லையென அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுளளார். குறித்த சம்பவம் இடம்பெற்ற இடமானது சபாநாயகர் சமல் ராஜபக்ஸவின் பிறந்த ஊரென தெரிவித்துள்ள அசாத்சாலி, இது சபாநாயகரையும் இழிவுபடுத்தும் செயலெனவும் கூறியுள்ளார்.

சபாநாயகர் பதவி விசேடமானதெனக் கூறி அதனை கையாளும் சமல் ராஜபக்ஷ நாட்டில் சரியான விடயங்கள் இடம்பெற வேண்டும் என்று நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல்கொடுப்பவராகவே உள்ளார் என அசாத் சாலியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற குழுவினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் நேரடியாகத் தலையிட்டு விசாரணைகளை முன்னெடுக்குமாறும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர், சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## பாகிஸ்தானியர்களை குடியேற்ற தெற்கில் இரகசிய திட்டம்

### அம்பலப்படுத்துகிறது சிங்கள ஊடகம்

(கொழும்பு)

இலங்கையில், பாகிஸ்தானியர்களை குடியேற்றும் இரகசிய திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரகசியமான முறையில் நாட்டுக்குள் அழைத்து, பாகிஸ்தானியர்கள் குடியேற்றப்பட்டு வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு பிரதேசத்தில் பாகிஸ்தானியர்கள் குடியேறியுள்ளனர். இவ்வாறு குடியேறிய 18 பாகிஸ்தானியர்கள் கடந்த ஆண்டில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவ்வாறான மூன்று பேர் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒரு மத நிறுவமொன்று இவ்வாறு குறித்த நபர்களை இலங்கைக்குள் அழைத்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் மலேரியா நோய் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான பாகிஸ்தானியர்களின் வருகையினால் மீண்டும் மலேரியா தலைதூக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

# சந்தர்ப்பம் வரும் என்றுகாத்திராமல் அதனை நாமே உருவாக்க வேண்டும்

## ஈழத்து விஞ்ஞானி சிவானந்தன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எங்களுக்கு சந்தர்ப்பம் வரும் என்று காத்திருந்தால் சந்தர்ப்பம் வராமலே போய்விடும். எனவே எங்களுக்கான சந்தர்ப்பத்தை நாங்கள் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டுமே தவிர அது ஒருபோதும் தானாக தேடிவராது என்று ஈழத்து விஞ்ஞானி சி.சிவானந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழக 73 ஆவது அகவை நிறைவு நாளும் சாதனையாளர் சிறப்புரை நிகழ்வும், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான "மாற்றத்துக்கான சாதனையாளன்" விருதைக் கடந்த வருடம் பெற்றிருந்த ஈழத்து விஞ்ஞானி பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன் விழா ஏற்பாட்டாளர்களினால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், மாவைசேனாதிராசா மற்றும் வடமாகாண சபையின் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் உட்பட வடமாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சிறப்புரையாற்றிய ஈழத்து விஞ்ஞானி சி.சிவானந்தன், மாணவர்கள் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களுடன உரையாடியதுடன் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில்களை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தனது சிறுவயது பராயம் முதல் பௌதீகம்சார் விடயங்களில் அதிகம் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் இதுவே புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்க வழி செய்துள்ளதாகவும் பாடசாலை மாணவர்களுடன் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

எங்களுக்கு சந்தர்ப்பம் வரும என்று காத்திருந்தால் சந்தர்ப்பம் வராமலே போய்விடும் எனவே எங்களுக்கான சந்தர்ப்பத்தை நாங்கள் தான் உருவாக்கி கொள்ள வேண்டுமே தவிர அது ஒருபோதும் தானாக தேடி வராது. அது போல தான் முயற்சியும் நா கள் ஒருமுறை முயன்று தோற்றுவிட்டால் அத்துடன் அதை கைவிட்டுவிடக் கூடாது. மீண்டும் மீண்டும் முயன்றால் தான் எதுவும் நம் வசப்படும் என்றார். (48)

## முரசின் இன்றைய பலன்



(20.04.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் சித்திரை மாதம் 07 ஆம் திகதி.
ஷட்டி / அமிர்தசித்தம்.
மூல நட்சத்திரம் . மு.இ. 08.08 வரை. பின் பூராடம்.
இராகு காலம் 04.32 - 06.02 வரை. சுபநேரம் 09.02 - 10.32 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | பொது நலஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் வந்து சேரும், அயலவர்களிடம் கொண்ட முரண்பாடு நீங்கி உறவிற்கு கைகொடுப்பர். |
| ரிஷபம் | தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபம் ஏற்பட முடியாத நிலைக்கு நஷ்டம் தக்க வைக்கும், அடகு நகை மீட்க நண்பர் பணஉதவி செய்ய முன்வருவர். |
| மிதுனம் | கணவன் – மனைவிக்குள் கனிவும் கலகலப்பும் ஏற்படும், வியாபாரத்துறையில் விரோதங்கள் ஏற்பட்டு துயர் தக்க வைக்கும். |
| கடகம் | புத்திசாலித்தனமான செயற்பாடுகளினால் பணியில் ஏற்பட்ட தடைகள் விலகும், வெளியூர் பயண முயற்சியில் ஈடுபட சனியின் கோசரபலன் பாதமாக இருத்தல். |
| சிம்மம் | பேச்சுத்திறனால் பிறரை கவர்ந்திழுக்கும் ஆற்றல் ஏற்படும், கடன் தொல்லை தீர நகைகளை அடகு வைக்க முஸ்தீபு. |
| கன்னி | சிந்தித்த கருமம் வெற்றியைக் கொண்டு வர இறைவனைப் பிரார்த்தித்தல், உடன் பிறப்பு பொறுத்த சமயத்தில் கைகொடுத்துதவல். |
| துலாம் | எதிர்பாராது ஏற்பட்ட சுப நிகழ்வால் பணம் புரட்ட நண்பரை நாடுதல், முற்றுப் பெறும் நிலைக்கு வந்த விவாகம் விசாரணையின் பின்னர் கைவிடல். |
| விருச்சிகம் | சகோதரர்களுடன் சொத்துப் பிரச்சினை சம்பந்தமாக முரண்பாடு ஏற்படல், பிள்ளைகளின் உயர்ச்சி கேட்டு ஆனந்தமயமாதல். |
| தனுசு | பெற்றோரின் அன்பிற்கு பாத்திரமாகி திக்குமுக்காடப் போகும் நிலை உண்டாகும், நண்பரின் கருணையால் வெளியூர் பயணம்மேற்கொள்ள அழைப்புவருதல். |
| மகரம் | வியாழசுகக் கேட்டினால் புதிய முயற்சியில் தடம் பதிக்க மனம் பின்னடித்தல், ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தலிலும் பணியில் தொய்வு நிலையும் ஏற்படல். |
| கும்பம் | புதிய ஜீவன் உருவாகும் அறிகுறி தென்பட்டதால் மனதில் மகிழ்ச்சி பொங்குதல், அச்சத்தையும் தாழ்வு மனப்பாங்கையும்ஒழித்ததால்எதிர்கொண்ட பிரச்சினை விலகிவிடல். |
| மீனம் | சீனிச்சத்தையும் உப்பையும் குறைத்ததால் நீரிழிவின் தாக்கம் அற்றுப்போதல், அஷ்டமத்துச் சனி வருட முழுவதும் இருப்பதினால் ஒப்பந்தத்தை புறந்தள்ளிவிடல். |

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று மு.ப.10 மணிக்கு யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த விசேட கூட்டத்தில் சம்மேளனத்தின் யாப்பு விடயமாகவும், மாதாந்த சந்தா சேகரித்தல் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். சகல அமைப்புகளின் பிரதிநிதிகளும் தவறாது சமூகமளிக்குமாறு பொதுச்செயலாளர் ஆர்.கே.சுவர்கஹான் அறிவித்துள்ளார். (105)

## பயிற்சிப்பட்டறை

சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் கீழ் புதிதாக நியமனம் பெற்ற கிராம அலுவலர்களுக்கு "நகராட்சி மன்றங்களின் செயற்பாடுகள்" என்ற தொனிப் பொருளில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையினை சாவகச்சேரி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்ததுடன், சாவகச்சேரி நகராட்சிமன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமை தாங்கினார்.

இந்தச் செயலமர்வில் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் புதிதாக நியமனம் பெற்ற 18 கிராம அலுவலர்கள் பங்கு பற்றினர்.

மேலும் இவ்வாறான செயலமர்வுகள் யாழ்.மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெற்ற 129 கிராம அலுவலர்களிற்கும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிம்மம்



## ஜய வருட பொதுபலன்கள்

(மகம், பூரம், உத்திரம் முதலாம் பாதம்)

சூரியனை ஆட்சி நாயகனாக கொண்ட சிம்ம ராசிக்காரர்களே!

அகத்திலே ஒன்று, புறத்திலே ஒன்று என்று பேசாமல் உள்ளம் சொல்வதை உடனடியாக உரைப்பவர்கள் நீங்கள்! உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் இந்த ஜய வருடம் பிறப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கொப்பளிக்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். உங்கள் இரசனைக்கேற்ப வீடு கட்டுவீர்கள். உங்களின் ராசியை சுக்கிரன் பார்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த வருடம் பிறப்பதால் உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள்வரும். அழகு, இளமைக் கூடும். வி.ஐ.பிகள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்ளுமளவிற்கு நெருக்கமாவீர்கள்.

பழுதாகிக் கிடந்த வாகனத்தை மாற்றி நவீன ரக வண்டி வாங்குவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். சகோதர வகையில் இருந்த மனவருத்தம் நீங்கும். வைகாசி, ஆனி மாதங்களில் உங்கள் ராசிநாதன் சூரியன் பலம் பெற்றிருப்பதால் புது முயற்சிகள் யாவும் பலிதமாகும். அரசாங்க விடயம் சாதகமாக முடியும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியை மீண்டும் தொடங்குவீர்கள். வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுபடுவீர்கள். ஜுன் 12 வரை உங்கள் ராசிக்கு இலாப வீட்டில் குரு தொடர்வதால் உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள்.

ஜுன் 13 ஆம் திகதி முதல் குரு உங்கள் ராசிக்கு 12 இல் மறைவதால் வீண் விரயம், ஏமாற்றம், தூக்கமின்மை, செலவுகள் வந்துபோகும். விலை உயர்ந்த பொருட்களை கவனமாகக் கையாளுங்கள். பணப் பற்றாக்குறையால் வெளியில் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

உங்களை நீங்களே தாழ்த்திக் கொள்ளாதீர்கள். ஜுன் 20 ஆம் திகதி வரை கேது 9ஆம் வீட்டில் நிற்பதால் சேமிப்புகள் கரையும். தந்தையாரின் ஆரோக்கியம் பாதிக்கும். சிறுசிறு அறுவைச் சிகிச்சைகளும் வரக்கூடும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். தந்தை வழிச் சொத்துக்களை பெறுவதில் பிரச்சினைகள் வந்து நீங்கும். ஜுன் 20 ஆம் திகதி வரை ராகு 3ஆம் வீட்டில் இருப்பதால் சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். மனோபலம் அதிகரிக்கும். இளைய சகோதர வகையில் உதவிகள் உண்டு.

தடைப்பட்ட திருமணம் கூடி வரும். ஜுன் 21 ஆம் திகதி முதல் நிழல் கிரகங்களான ராகு 2 ஆம் வீட்டிலும் கேது 8 ஆம் வீட்டிலும் அமர்வதால் குடும்பத்தில் சலசலப்புகள் வரும். பார்வைக் கோளாறு வரக்கூடும்.

டிசம்பர் 15 வரை சனிபகவான் 3 ஆம் வீட்டில் தொடர்வதால் எதிலும் வெற்றி பெறுவீர்கள். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். புது வேலை கிடைக்கும். காணாமல் போன முக்கிய ஆவணம் கிடைக்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பும் வரும். உங்களைவிட வயதில் குறைந்தவர்கள் மூலமாக ஆதாயமடைவீர்கள்.

மனைவி வழியில் பக்க பலமாக இருப்பார்கள். நகர எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் வீடு வாங்குவீர்கள். சிலர் புது முதலீடு செய்து தொழில் தொடங்குவீர்கள். டிசம்பர் 16 ஆம் திகதி முதல் சனி 4 இல் அமர்ந்து அர்த்தாஷ்டமச் சனி தொடங்குவதால் வேலைச்சுமை, வாகனப் பழுது, தாயாருடன் மோதல்கள், அவருக்கு மூட்டு வலி, வந்து நீங்கும். தாழ்வு மனப்பான்மை வந்து நீங்கும். யாருக்காகவும் சாட்சிக் கையெழுத்திட வேண்டாம். ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, மார்கழி பிற்பகுதி மற்றும் மாசி மாதங்களில் அநாவசியச் செலவுகள், குடும்பத்தில் சச்சரவு, முன்கோபம் வந்துபோகும்.

முக்கிய பிரமுகர்களின் அறிமுகத்தால் பெரிய நிறுவனத்தின் ஒப்பந்தம் கிடைக்கும். கார்த்திகை, மார்கழி பிற்பகுதியில் புதிய கிளைகளைத் தொடங்குவீர்கள். ஜுன் 12 வரை உத்தியோகத்தில் எல்லோராலும் மதிக்கப்படுவீர்கள். ஜுன் 13 ஆம் திகதி முதல் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

சிலர் தங்களை அறிவாளியாக காட்டிக் கொள்ள உங்களை மட்டம் தட்டி மேலிடத்தில் சொல்லி வைப்பார்கள். அதனால் உங்களின் உயர்வுகளை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ளாதீர்கள். சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வைகாசி, ஆனி, பங்குனி மாதங்களில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். புதிய பொறுப்புகள் தேடி வரும். சிலர் உத்தியோகத்தின் பொருட்டு அயல்நாடு செல்வீர்கள்.

**கலைத்துறையினருக்கு** - பகட்டாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். மூத்த கலைஞர்களின் நட்பால் ஆதாயமடைவீர்கள். உங்களின் படைப்புகளை போராடி வெளியிட வேண்டி வரும்.

**மாணவர்களுக்கு** - விளையாட்டைக் குறையுங்கள். தொடக்கத்திலிருந்தே படிப்பில் தீவிரம் காட்டுங்கள். நீங்கள் விரும்பிய பாடப் பிரிவில் சிலரின் சிபாரிசு அல்லது அதிக பணம் கொடுத்து சேர வேண்டிய சூழ்நிலை உருவாகும். பேருந்துகளில் படிக்கட்டுகளில் நின்று பயணிக்க வேண்டாம்.

**பெண்களுக்கு** - காதல் விவகாரத்தில் எச்சரிக்கையாக இருங்கள். உயர்கல்வியில் போராடி வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆலோசனைகள் இப்போது கசப்பாக இருந்தாலும் பின்னர் அது சரியானது தான் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

# INDIAN PREMIER LEAGUE 2014

## இன்றைய ஆட்டம்

**ராஜஸ்தான் எதிர் பஞ்சாப்**

**இடம்: சார்ஜா. நேரம்: இரவு 8 மணி**

## ஐ.பி.எல். துளிகள்

அனைத்துத் துறைகளிலும் எங்களை பெங்களூர் அணி வீழ்த்திவிட்டது. டுமினி, ரெய்லர் ஆகியோர் சிறப்பாக ஆடியபோதும் ஏனையவர்கள் போதுமான அளவுக்கு சரியாக ஆடவில்லை. இதேபோல் எங்களின் களத்தடுப்பும் மோசமாக அமைந்துவிட்டது. அடுத்து வரும் போட்டிகளில் இவற்றை சரி செய்து சிறப்பாக செயற்படுவோம்.

**டில்லி கப்டன் தினேஷ் கார்த்திக்**

ஒரு கட்டத்தில் சென்னை அணி 230 ஓட்டங்களை நோக்கி பயணிப்பது போல் தெரிந்தது. ஆனால் நடுவரிசை ஓவர்களில் கொஞ்சம் கட்டுப்படுத்திவிட்டோம். நாங்கள் துடுப்பாட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக, எம்மால் முடியும் என்ற மனநிலையுடன் முயற்சி செய்யுங்கள் என்று வீரர்களை அறிவுறுத்தினேன். மைக்ஸ்வெல்லின் துடுப்பாட்டம் அசாதாரணமானது. இது மாதிரியான ஆட்டங்களை அடிக்கடி பார்க்க முடியாது. என்றாலும் இது போன்று அவர் மறுபடியும் கலக்குவார் என்று நம்புகிறேன்.

**பஞ்சாப் கப்டன் ஜோர்ஜ் பெய்லி.**

நாங்கள் 200 ஓட்டங்கள் குவிக்கும் போது, பஞ்சாப் அணியாலும் 200 ஓட்டங்கள் எடுக்க வாய்ப்பிருப்பதை மறந்து விடக்கூடாது. இது அருமையான ஆடுகளம். அவர்கள் உண்மையிலேயே துடுப்பாட்டத்தில் அசத்தினர். வெற்றிக்கான எல்லா தகுதியும் அவர்களுக்கு உண்டு. பந்து வீச்சில் நாங்கள் இதைவிட சிறப்பாக செயற்பட்டிருக்க வேண்டும். துடுப்பாட்ட வீரர்கள் தங்களது பணியை நேர்த்தியாகச் செய்தனர். அதே சமயம் பந்து வீச்சாளர்கள் ஒவ்வொரு வீரருக்கு எதிராகவும் தனித்தனி வியூகங்களை அமைத்து செயற்பட்டிருக்க வேண்டும். சரியான திசையில் துல்லியமாக பந்து வீசுவது எப்போதும் முக்கியம். எமது இலக்கு ஒரு இஞ்சி தவறினாலும், பந்து ஓட்டங்களாக மாறிவிடும். ஆடுகளத்தில் பந்து அதிகமாக சுழன்று திரும்பவில்லை. இதனால் பந்து வீச்சாளர்கள் சிரமப்பட்டனர்.

**சென்னை கப்டன் டோனி**



# நியாயமற்ற விமர்சனம்

(டுபாய்)

ருவென்ரி-20 உலகக் கிண்ணப் போட்டியில் அடைந்த தோல்விக்கு யுவராஜ்சிங்சை விமர்சித்தது நியாயமற்றது என பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

ருவென்ரி- 20 உலகக் கிண்ணத் தோல்விக்காக யுவராஜ்சிங்கை விமர்சித்தது நியாயமற்றது. அவர் 2 உலகக் கோப்பையை (2007ஆம் ஆண்டு ருவென்ரி-20, 2011ஆம் ஆண்டு 50 ஓவர்) எமக்கு வென்று தந்துள்ளார். "யுவராஜ்சிங், தனிநபராக வெற்றி தேடித்தரக்கூடிய திறன்படைத்தவர் என்பதை நிரூபித்து இருக்கிறார். அவரைப் போன்ற சிறந்த வீரருக்கு பக்கபலமாக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். டில்லி அணிக்கெதிராக நாங்கள் சிறப்பான வெற்றிைப் பதிவு செய்தது மகிழ்ச்சி அளிக்கின்றது. ஆடுகளத்தில் 170 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க முடியும். எங்களது பந்து வீச்சாளர்கள் டில்லி டேர்டெவில்ஸ் அணியை 145 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது பெரிய விடயமாகும். சஹால் பந்து வீச்சு சிறப்பாக இருந்தது. இதேபோல் வருண் ஆரோன், ஸ்டார்க் ஆகியோரும் நன்றாக பந்து வீசினார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் உரிமையாளரான விஜய் மல்லையாவும் யுவராஜ்சிங்கின் ஆட்டத்தை புகழ்ந்துள்ளார். இது குறித்து அவர் கருத்து தெரிவிக்கையில், டில்லி அணியை வீழ்த்தியதில் யுவராஜ்சிங் முக்கிய பங்கு வகித்ததுடன், தனது பழைய சிறந்த நிலை ஆட்டத்துக்கு அவர் திரும்பி இருப்பது எனக்கு மனநிறைவு அளிக்கிறது. அவரது ஷொட்கள் அற்புதமானது எனக் குறிப்பிட்டார்.



# நடால் வெளியேற்றம்

மான்ட் கார்லோ ரென்னிஸ் தொடர் களிமண் நாயகன் நடால் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

மான்ட் கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் போட்டி மொனாக்கோவில் நடைபெற்று வருகின்றது. இதன் ஒற்றையர் காலிறுதியில் முதல்நிலை வீரரும், 8 முறை சம்பியனுமான ஸ்பெயின் ரபெல் நடால், சக நாட்டவர் டேவிட் பெரரை எதிர்கொண்டார். 2 மணி 13 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டத்தில் பெரர் 7-6 (1), 6-4 என்ற நேர் செட்டில் நடாலுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தார். களிமண் தரை போட்டியான மான்ட் கார்லோ ரென்னிசில் கடந்த 11 ஆண்டுகளில் நடால் தோற்கடிக்கப்படுவது இது 3ஆவது முறையாகும்.

வெற்றிக்குப் பின்னர் டேவிட் பெரர் கூறும் போது, இது சிறப்பு வாய்ந்த வெற்றி. களிமண் தரை போட்டியில் அவரை 10 ஆண்டுகளுக்கு பின்னர் வீழ்த்தியுள்ளேன். இதனால் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

தோல்வி மிகுந்த வேதனை அளிக்கின்றது. பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கான சிறந்த பயிற்சிக் களமாக இது அமையும் என எதிர்பார்த்தேன் என தோல்வியின் பின் நடால் தெரிவித்துள்ளார்.

மற்றொரு காலிறுதியில் பிரான்சின் சோங்காவுக்கு எதிராக மயிரிழையில் தப்பிய சுவிஸின் ரோஜர் பெடரர் 2-6, 7-6 (6), 6-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியை எட்டினார்.

# பிராந்திய அணியில் சங்கா



இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் குமார் சங்ககார, இங்கிலாந்து பிராந்திய கிரிக்கெட் அணியான டெர்ஹாம் அணியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுலாவை இலங்கை மேற்கொள்ளவுள்ளது. இந்தத் தொடருக்கு முன்னர் டெர்ஹாம் அணியுடன் இணைந்து கொள்வது நல்ல அனுபவத்தை அவருக்கு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

டெர்ஹாம் அணியுடன் இணைந்து கொள்வதனால் இங்கிலாந்து தொடருக்கு முன்னர் நடைபெறவிருக்கும் அயர்லாந்து தொடரில், இரண்டு ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில், குமார் சங்ககார பங்குபற்ற முடியாமல் போகும். இலங்கை கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழுவினர் இதற்கான அனுமதியை இன்னமும் வழங்கவில்லை. இருப்பினும் அனுமதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை, குமார் சங்ககார இரண்டு அல்லது மூன்று போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் எனக் கூறியுள்ளார்.

இந்தப் போட்டிகள் நிறைவடைந்ததும் அவர் இலங்கை அணியுடன் இங்கிலாந்தில் இணைந்து கொள்வார்.

# தாயகம் திரும்பிய யூசுப்

(டுபாய்)

தனது மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்ததை அடுத்து, கொல்கத்தா அணியின் யூசுப் பதான் தாயகம் திரும்புகிறார்.

கொல்கத்தா அணியின் சகலதுறை வீரர் யூசுப் பதான், சமீபத்தில் முடிந்த 7ஆவது ஐ.பி.எல்., தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் ரூ. 3.25 கோடிக்கு கொல்கத்தா அணியில் தக்கவைக்கப்பட்டார்.

ஐ.பி.எல்., அரங்கில் இதுவரை இவர் 92 போட்டியில் 1824 ஓட்டங்கள் எடுத்துள்ளார். கடந்த ஆண்டு மார்ச் 27ஆம் திகதி யூசுப் பதான், அப்ரீன் என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு நேற்று ஆண் குழந்தை பிறந்தது. தற்போது இவர், 7ஆவது ஐ.பி.எல்., தொடருக்காக ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.,) உள்ளார்.

மும்பை .அணிக்கு எதிரான முதல் போட்டியில் கொல்கத்தாவுக்காக விளையாடிய இவர், 4 பந்தில் 4 ஓட்டங்கள் எடுத்து அவுட்டாகாமல் இருந்தார். குழந்தை பிறந்ததை அடுத்து தாயகம் திரும்ப உள்ள இவர், டில்லி அணிக்கு எதிராக டுபாயில் நேற்று நடைபெறவுள்ள போட்டியில் பங்கேற்கவில்லை.

இவர், பெங்களூர் அணிக்கு எதிராக எதிர்வரும் 24ஆம் திகதி சார்ஜாவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்பார் எனத் தெரிகிறது.

இத்தொடரில் ஹைதராபாத் அணிக்காக விளையாடும் யூசுப் பதானின் சகோதரர் இர்பான் பதான் டுவிட்டரில் வெளியிட்ட செய்தியில், எனது சகோதரர் யூசுப் பதானுக்கு ஆண் குழந்தை பிறந்தது மகிழ்ச்சியாக உள்ளது. இதனை விவரிக்க வார்த்தைகள் இல்லை. அந்த குழந்தைக்கு நான் சித்தப்பா எனக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன் எனத் தெரிவித்தார்.

# இன்று பி.சி.சி.ஐ. இன் அவசர கூட்டம்

இந்திய கிரிக்கெட் சபையின் அவசர கூட்டம் ஒன்றை இன்று நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் தொழிற்பாட்டு நிர்வாக சபைக் கூட்டமாக அமையவுள்ளது. மாநில கிரிக்கெட் சபைகளின் வேண்டுகோளைத்தொடர்ந்து இந்தக் கூட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற்று வரும் நிலையிலேயே மாநில கிரிக்கெட் சபைகள் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளன.

இந்த நிலையில் வழக்கு தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் இந்தக்கூட்டத்தில் நிகழும் என எதிர் பார்க்கப்படுகின்றது. ஸ்ரீனிவாசன் மற்றும் இந்திய கிரிக்கெட் சபைக்கு ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை அடுத்த வழக்கு விசாரணைக்கு முன்னர் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டம் அறிவிக்கப்பட்டதையடுத்து ஐ.பி. எல் ஆரம்ப நிகழ்வுகளுக்கு சென்ற இந்திய கிரிக்கெட் சபை நிர்வாகிகள் உடனடியாக நாடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை சுனில் கவாஸ்கர் இந்த கூட்டத்தில் பங்கெடுப்பதா, இல்லையா என்ற குழப்பங்கள் நிலவுகின்ற போதும் அவர் பங்கேற்ப்பார் என்றே தெரிய வருகின்றது.

நீதிமன்றினால் இந்திய கிரிக்கெட் சபையின் இடைக்கால தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயிற்சியாளரைத் தேடும் பாகிஸ்தான்

(லாகூர்)

பயிற்சியாளருக்கான விண்ணப்பங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரியுள்ளது.

பாகிஸ்தான் அணியின் தற்போதைய பயிற்சியாளராக செயற்பட்டு வரும் மொயின் கானின் ஒப்பந்தத்தை நீடிக்கப் போவதில்லையென பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.


அத்துடன் பாகிஸ்தான் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளர் சுஹைப் மொஹமட் மற்றும் துடுப்பாட்ட ஆலோசகர் சஹீர் அப்பாஸ் ஆகியோரது ஒப்பந்தத்தையும் இடைநிறுத்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த ஆண்டில் இரண்டாவது தடவையாக பயிற்சியாளருக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உள்ளூரில் ஒருவரை பயிற்சியாளராக நியமித்தல் சிறப்பாக இருக்கும் என மொகமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

# மாவட்ட பாடசாலை மட்ட கரப்பந்து சம்பியன் பட்டம் வென்ற அணிகள்

## இலங்கைக்கு வெள்ளி



(டாக்கா)

முதலாவது தெற்காசிய கூடைப் பந்தாட்டப்போட்டியில் இலங்கை அணி வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி கடந்த 14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை பங்களாதேஷ்- டக்கா நகரில் நடைபெற்றது.

பங்களாதேஷ் அணி அனைத்து அணிகளையும் வெற்றிபெற்றே கிண்ணத்தைக் கைப்பற்றியது. இரண்டாமிடத்தைப் பெற்ற இலங்கை அணி 4 ஆட்டங்களில் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றமை விசேட அம்சமாகும். இலங்கை அணி நேபாளம், பூட்டான், மாலைதீவு அணிகளை வெற்றி கொண்டது.

இப்போட்டியில் மூன்றாமிடத்தை நேபாள அணியும் நான்காமிடத்தை மாலைதீவு அணியும் ஐந்தாமிடத்தை பூட்டான் அணியும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. நான்கு நாட்களாக இடம்பெற்ற போட்டியில் அணிக்கு மூன்று பேர் வீதம் பங்கு கொண்டமை விசேட அம்சமாகும்.

அணிகள் இச்சுற்றுப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் ஆகிய கலந்து கொள்ளவில்லை.

இப்போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றமை மகிழ்ச்சி அளிக்கின்றது. அனைவரும் ஒருங்கிணைந்து, ஆடிய தன் மூலம் வெற்றியைப் பெற்றுக் கொள்ள முடிந்தது என இலங்கை அணிக் கப்டன் தெரிவித்துள்ளார்.



கோப்பாய் மகா வித்தியாலயம்

(நெல்லியடி)

யாழ். மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டப் போட்டி கடந்த புதன் கிழமை முதல் நேற்று முன்தினம் வரை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15,17,19 வயதுப் பிரிவு ஆண், பெண் அணிகள் மோதிக் கொண்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்துக் கொண்ட அணிகளின் விபரம் வருமாறு:

15 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடம் கோப்பாய் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் ஆவரங்கால் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி. 17 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடம் சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி, இரண்டாமிடம் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், மூன்றாமிடம் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி. 19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடம் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி, இரண்டாமிடம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

15 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாமிடம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், இரண்டாமிடம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் பருத்தித்துறை சென். தோமஸ் மகாவித்தியாலயம். 17 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாமிடம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம், இரண்டாமிடம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. 19 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாமிடம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் அளவெட்டி அருணோதயக் கல்லூரி, மூன்றாமிடம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி. (12)



சுழிபுரம் விக்டோரியக் கல்லூரி



நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்



புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி



மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

# இறுதியில் யாழ். பல்கலை

(யாழ்ப்பாணம்)

விஸ்ணு, அச்சுதன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். பல்கலைக்கழக அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையும் உடற்கல்வி அலகும் இணைந்து நடாத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இறுதி லீக் ஆட்டம் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ். பல்கலைக்கழக அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். பல்கலைக்கழக அணி விஸ்ணு, அச்சுதன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். பல்கலைக்கழக அணி 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விஸ்ணு 76, அச்சுதன் 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அகிலன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 251 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி ஆரம்பத்தில் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் லவேந்திரா ஒரு முனையில் பொறுமையாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் ஜொனியன்ஸ் அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் லவேந்திரா 79, கானாமிர்தன் 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விதுரன் மூன்று, விதுஷன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் யாழ். பல்கலைக்கழக அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டியில் ஜொனியன்ஸ் வீரர் லவேந்திரா போட்டியின் ஆட்டநாயகன் விருதை வென்றார்.

இதேவேளை, யாழ். சென்றல் அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# இளைஞர் கழக கால்பந்து இறுதியில் நவாலி, சாவற்கட்டு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு சாவற்கட்டு இளைஞர் கழகம் மற்றும் நவாலி வடக்கு இளைஞர் கழக அணிகள் தகுதி பெற்றுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் நடைபெற்றன.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி இளைஞர் கழக அணியும் சாவற்கட்டு இளைஞர் கழக அணியும் மோதின.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல் போடுவதற்காக எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தன. எனினும் முதல் பாதியில் இரு அணிகளாலும் கோல்கள் எவையும் பெறப்படவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு கோல்களைப் போட்டுக்கொண்டன. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் சாவற்கட்டு இளைஞர் கழக அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் பெரியவிளான் இளைஞர் கழக அணியும், நவாலி வடக்கு இளைஞர் கழக அணியும் மோதின.

இப்போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நவாலி வடக்கு இளைஞர் கழக அணி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடி கொடுக்கும் முனைப்பில் பெரியவிளான் இளைஞர் கழக அணி முயற்சி செய்த போதும் இறுதி வரை அது பயனளிக்கவில்லை. நிறைவில் நவாலி வடக்கு இளைஞர் கழக அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

தமிழ் மக்களிடமிருந்தே வெளிப்படுவதாக ஒரு தோற்றப்பாட்டை காண்பிப்பதன் மூலம் இராணுவத்தை தமிழ் மக்களுக்கு விரோதமாக சிந்திக்கத் தூண்டுவது கொள்ள் வேண்டும். இவர்கள் இனம் சார்ந்து தமது மக்களுக்காக முன்வைக்கும் கோரிக்கை, எதிர்த்தரப்பின் இனத்துவ சூழலில் சர்ச்சையாக நோக்கப்படுவதை பிரதான

அவருக்கு முன்னால் சத்தியப்பிரமாணம் எடுப்பதைவிட அவ்வாறு எடுக்காமல் விடுவதன் மூலம் தமது இனவாத அரசியலுக்கு மேலும் வலுச் சேர்க்கும் எந்தச் சூழலிலும் நீதி, உரிமை கேட்டு தமக் கெதிராக கிளர்ந்தெழாத வாறு பார்த்துக் கொள்வது.

இதிலிருந்தே பலதரத் திலான படிநிலைகளைக் கொண்ட தமிழச் சமூகத்தில்

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கபடத்தன அரசியல்!

**- சாலையூரான்**



**வ**டக்கின் தமிழ்ச் சூழலின் நெருக்கடி நிலமையை வெளிப்படுத்தும் விதமாக முன்னாள் வட-கிழக்கு மாகாண முதலமைச்சரின் கட்டுரையொன்று இணையத்தில் பிரசுரமாகி இருந்தது. அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்க ளுடன் இணைந்ததாக மேலும் சில விடயங்களை குறிப்பிட விரும்புகிறேன்.

வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்கிற தமிழ்க் கூட்டமைப்பினது கோரிக்கையின் உள்நோக்கமென் பது, அரசு இணங்க முடியாத ஒன்றை முன்வைப்பதன் மூலம் தமது கோரிக்கையை அரசு ஒரு போதும் நிறைவேற்றப் போவதில்லை என்பதை தமிழ் மக்களுக்கு நிரூபிக்கும் ஒரு முயற்சியாகும்.

அடுத்தது இந்தக் கோரிக்கை அவர்களின் அடுத்த எதிர் பார்ப்பாகும். ஒரு கோரிக் கையை தாம் முன்வைக்கும் போது அதனை அரசு ஒருபோதும் நிறைவேற்றாமல் இருக்கும் ஒன்றாக பார்த்துக் கொள்வது இந்த தமிழ்த் தலைவர்களின் மேலான அக்கறையாக எப்போதும் இருக்கிறது. அவ்வாறே இருந்து வந்திருக்கிறது.

கூடவே இது தென்னி லங்கை அரசியல் சக்திகளை, தம்மை தேசத் தின் காவலர்களாக அவர் களது சூழலில் வெளிப் படுத்திக் கொள்ளத் தூண்டுவதுடன், அரசுடன் இருக்கும் பங்காளிக் கட்சிகளது தளர்வான உறவுக்கு புத்துயிர் கொடுக்கும் ஒரு முயற்சி யாக இந்த இராணுவம் குறித்த சர்ச்சையை இவர்கள் உருவாக்க முனைகிறார்கள்.

இதில் இனவாத அரசிய லுக்கான பிரதான பண் பொன்று வெளிப்படுத்தப்படு வதையும் குறித்துக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறது.

அடுத்தது வடக்கின் ஆளுநர் விடயத்தில், அவரது செயற்பாடுகளில் மிகக் கடுமையான சிங்கள இனவாதியாக அவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பது தமிழ் கூட்டமைப்பினரின் பெருவிருப்பமாக இருக்கிறது.

அடுத்தது அவர்களின் எதிர்ப்பு அரசியலில், அரசிடமிருந்து எந்த சிறு உதவிகளையும் தமிழ் மக்கள் பெற்றுவிடாது பார்த்துக் கொள்வதென்பது இவர்களது பிரதான வேலைத்திட்டத்தின் உள்ளடக்கமாகும்.

நிற்க, ஆளுநருக்கு முன்னால் சத்தியப்பிர மாணம் எடுக்கக் கூடாதென்று இவர்கள் போட்ட நாடகம், உண்மையில் அவர் இராணுவ அதிகாரியாக இருக்கிறார் என்கிற காரணத்துக்காக அல்ல. மாறாக இவ்வாறு சத்தியப்பிரமாணம் எ[illegible]ப் பதை சிங்கள அரசின் முன் மண்டியிடும் ஒரு நிகழ்வாக காண்பிப்பதையே இவர்கள் விரும்புகிறார்கள்.

பரந்தளவிலான ஆதரவை தமிழ் மக்களிடமிருந்து பெறமுடியுமென இந்தத் தலைவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. அவ்வாறு சத்தியப்பிரமாணம் எடுத்தால் இந்த அரசு பற்றி தாம் தமிழ் மக்களுக்கு இதுவரை கூறிவந்த விடயங்கள் பொய்யானவை போலி யானவை என்கிற குட்டு வெளிப்பட்டுவிடுமென்ற அச்சம் வேறு இவர்களை குழப்புகிறது.

தமிழ் தேசத்தில் அதிகார மேலாண்மை கொண்டு இருக்கும் இந்த தமிழ் தலைவர்களுக்கு, தமது சூழலில் இருக்கும் ஏற்றத்தாழ்வுடனான சமூகப்படிநிலையை முன்பு இருந்தவாறே பேணிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

அதற்காக இந்த தலை வர்கள் இரு சவால்களை எதிர்கொள்ள வேண்டும். ஒன்று இந்த தமிழ் மக்களுக்காக அரசின் உதவிகள் எதையும் இந்த மக்கள் பெறமுடியாத சூழலொன்றை நாட்டில் பேணிக்கொள்வது.

அடுத்தது இந்த மக்கள் அனைவரையும் தமக்குக் கீழ் ஒருமுகப்படுத்துவதற் கான ஒரு அரசியல் பொறி முறையாக தமிழ் இனவாதம் பேசுவதை தமிழ் கூட்டமைப்பு தேர்ந்து கொண்டிருக்கிறது.


அதற்கிணங்க அவர்கள் உருவாக்கிக் கொண்டுள்ள அரசியல் வழிமுறைதான் தமிழ் மக்களின் பெயரால் எதையும் நிராகரிக்கும் எதிர்ப்பு அரசியல்.

வடக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்னும், அவ்வாறே அதன் பின்னரும் தமிழ் கூட்டமைப்பினர் முன்வைத்த கோரிக்கைகள் எவ்வாறிருக்கின்றன என்பதை அவதானித்தால் அவர்களின் உள்நோக் கத்தை அறிந்துகொள்ள முடியும்.

தமிழ்த் தேசியத்தை இந்த தலைவர்கள் ஏன் தூக்கிப்பிடிக்கிறார்கள். இதனால் தமிழ்ச் சமூகத்தின் இடைநிலை மற்றும் கடைநிலையிலுள்ள அணி யினர் பெற்றுக் கொண்ட நன்மைகள் என்ன என்பதை சீர்தூக்கிப் பார்த்தால் இந்த அரசியலின் பின்னால் உள்ள கபடத்தனத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

---

# "சாலைவிதிகள்" அறிந்ததும் அறியாததும்




- பகலில் முகப்பு விளக்குகளை எரியவிட்டு எதிரே வரும் வாகனத்தை எச்சரித்தபடி முன்னேறுவது குற்றம்.
- சாதாரண நேரங்களில் நான்கு புறங்களிலும் உள்ள எச்சரிக்கை விளக்கை எரியவிடுவது தவறு. அபாயகரமான அல்லது வாகனம் பழுதாகி நிற்கும் போதோ, பழுதான வாகனத்தை பிற வாகனங்கள் இழுத்துச் செல்லும்போதோ போன்ற சூழ்நிலைகளில்தான் அவ்வாறு எரியவிட வேண்டும்.
- சிக்னல்கள் அல்லது ரோட்டில் வாகனங்களை நிறுத்தி இருக்கும்போது அனைத்து விளக்குகளையும் எரியவிடக் கூடாது.
- சாலையின் நடுவில் கோடுகளைக் குறிப்பிட்ட இடைவெளி விட்டுவிட்டுப் போட்டிருந்தால் ஒரு வாகனத்தை நாம் இந்த இடத்தில் முந்திச் செல்லலாம் என்று பொருள். அதேசமயம் தொடர்ச்சியான நீண்ட கோடுகளாகப் போட்டிருந்தால் முந்தக்கூடாது என்று பொருள்.
- சாலையின் நடுவில் தொடர்ச்சியாக இரட்டைக் கோடுகள் போட்டிருந்தால் அதை ஒரு தடுப்புச் சுவராகக் கருத வேண்டும்.
- ஓட்டுநருக்கு 20.5 மீற்றர் அல்லது 67 அடி தொலைவில் வரும் வாகனத்தின் பதிவு எண்ணைப் படிக்க முடிந்தால் கண்கள் நல்ல பார்வையுடன் உள்ளது எனப் பொருள். எனவே ஆண்டுக்கு ஒருமுறை ரத்த அழுத்தம், நீரிழிவு, கண்பரிசோதனை செய்வது நல்லது.
- கனரக வாகனங்க ளின் பின்புறம் சிவப்பு முக்கோண வடிவச்சின் னம் உள்ளது. இது மோட்டார் வாகனச் சட்டப்படி முற்றிலும் தவறு. அது ஓர் எச்சரிக்கை சின்னம். சாலையில் ஒரு வாகனம் பழுதாகி நின்றாலோ, அவசரநிலையிலோ அதை வாகனத்தின் பின்புறம் 15 அடி தள்ளித்தான் வைக்க வேண்டும்.
- நெடுஞ்சாலையில் எதிரே வரும் வாகனத்திற்கு வசதியாக முகப்பு விளக்குகளை 250 மீற்றருக்கு முன்பே "டிம்" செய்ய வேண்டும்.
- கார்களில் செல்வோர் சீற் பெல்ட் அணியும்போது சட்டைப் பையில் செல்போன், பேனா, சில்லறைக் காசுகளை வைத்திருப்பதைத் தவிர்க்க வேண்டும். பெண்கள் அதிக நகைகள் அணிந்திருக்கக் கூடாது. அசம்பாவிதம் நேரிட்டால் அந்தப் பொருட்களே பயணிக்கு எமனாக மாறிவிடும்.
- வளைவுகளில் அதிவேகமாக வாகனம் ஓட்டிச் சென்றால் விபத்து நடக்கும். அதற்கு "ஸ்லோ இன்", ".பாஸ்ட் அவுட்" என்ற முறையில் செல்ல வேண்டும். அதாவது மைய ஈர்ப்பு விசை, விலக்கு விசைக ளின் அடிப்படையில் வளைவுகளில் நுழையும்போது மெதுவாகவும், பின்பு லேசாக ஆக்ஸிலேட்டரை அழுத்தியும் செல்ல வேண்டும். ஆனால் பலர் வேக மாக நுழைந்து பிரேக் அடித்துத் திரும்புகின்றனர். இதனால் வாகனம் கவிழ்ந்துவிடும் வாய்ப்பு உண்டு.

மொத்தத்தில் விவேகமான வேகமே விபத்துகளில் இருந்து நம்மைப் பாதுகாக்கும்.

---

# மங்கலான புகைப்படங்களை சரி செய்யும் இணையதளம்



**உங்களிடம் மங்கலான புகைப்படங்கள் இருக்கின்றனவா?**

இந்த கேள்வியை கேட்பது ஸ்மார்ட் டிப்லர் இணையதளம். [illegible]ங்கலான புகைப்படங்கள் என்றால் [illegible]ப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. புகைப்படத்தில் உள்ள காட்சி தெளிவில்லாமல் இருப்பதோடு, பின்னணி மங்கி இருக்கும் படங்கள், அருகே உள்ள உருவங்கள் கலைக்கப்பட்டது போல இருக்கும் படங்கள் என தெளிவில்லாமல் காட்சி தரும் எல்லா வகையான புகைப்படங்களும் தான்.

கமரா கோணம் சரியாக இல்லாத தில் தொடங்கி, கிளிக் செய்யும் போது ஏற்பட்ட அசைவு என பல காரணங்களினால் புகைப்படம் தெளிவில்லாமல் போகலாம். கமரா போன் யுகத்தில் உங்கள் வசமே கூட இப்படி பல புகைப்படங்கள் இருக்கலாம். இதை தான் ஸ்மார்ட் டிப்லர் அக்கறையோடு கேட்கிறது. அவற்றை ஒரே கிளிக்கில் இந்தத் தளம் சரி செய்து தருகிறது.


போட்டொஷாப் தெரிந்தவர் கள், சாதாரண புகைப்படங்களில் கூட வண்ணங்கள் மற்றும் இதர அம்சங்களை திருத்தி அந்த புகைப்படத்தை அப்படியே மேம்படுத்தி தருவார்கள். அதே போல இந்த தளம் தன்னிடம் சமர்ப்பிக்கப்படும் மங்கலான புகைப்படங்களை திருத்தி மேம்படுத்தி தருகிறது. இதில் உள்ள மென்பொ ருளை டவுண்லோட் செய்து கொண் டால் போதும். கட்டண சேவையும் இருக்கிறது.

இதைக் கேட்டால் ஏதோ மாயம் போல இருக்கும். ஆனால் இதன் பின்னே இருப்பது மாயம் எல்லாம் இல்லை, blind deconvolution எனும் கோட்பாடு தான் என்கிறார் விளாடிமிர் யூஸிகோ. இவர் தான் இந்தத் தளத்தை உருவாக்கியிருப்பவர். எளிதானதே தவிர புரிந்து கொள்ளக் கொஞ்சம் சிக்கலான கோட்பாடு இது என்கிறார். இதற்கான விளக்கத்தை தனியே கொடுத்துள்ளார். கணிதவியல் சமன்பாடுகளுடன் ஏதோ கணக்குப் பாட தேற்றத்துக்கான விளக்கம் போல இருக்கும் அந்த விளக்கத்தை முழுவதும் படிக்க முடிகிறதோ இல்லையோ. விளாடிமிரின் திறமை மீது மதிப்பு பிறக்கும்.

**இணையதள முகவரி:**
**http://smartdeblur.net/**

# பத்தாவது ஆண்டில் ‘படிகள்’

- வெள்ளைக் கிருஷ்ணன் -




“தம்புள்ள”வில் இருந்து மரக்கறிகள் வருவதைப்பற்றித் தெரிந்த பலருக்கு அனுராதபுரத்தி லிருந்து இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாக வெளிவரும் “படிகள்” என்ற இலக்கிய சஞ்சிகையைப் பற்றித் தெரியாது. தமிழர்களின் வாழ்க்கையும் அக்கறைகளும் அந்த அளவுக்குச் சுருங்கி விட்டனவா அல்லது அப்படி திசை மாறிவிட்டனவா என்று தெரியவில்லை. “படிகள்” ஜனவரி பெப்ரவரி 2014 இதழ் வெளிவந்திருக்கிறது. இது படிகளுக்குப் பத்தாண்டு. பத்தாண்டுச் சிறப்பிதழுக்கான முன்னறிவிப்பு இதழ் இதுவெனலாம்.

அனுராதபுரத்தில் ஒரு காலம் தமிழர்கள் செழிப்பாக இருந்தார்கள். அவர்களுடைய கடைகள் இருந்தன. அவர்களுக்கு நில புலங்களும் சொத்துகளும் இருந்தன. ஏன் சிற்றம்பலம், வியஜேந்திரா என்று தமிழ்த் தியேட்டர்கள் கூட இருந்தது. இன்னும் அங்கே, கதிரேசன்கோவில், சிவன்கோவில், விவேகானந்த மகாவித்தியாலாயம் என்ற தமிழ்ப் பள்ளிக்கூடம் எல்லாம் இருக்கிறது என்று நம்மிற் பலரும் பேசிக்கொண்டுமிருக்கிறார்கள்.

ஆனால், வஸீம் அக்ரமும் எம்.சீ. நஜிமுதீனும் அங்கிருந்து “படிகள்” இதழைப் பத்தாண்டுகளாக வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த சில மாதங்களில் படிகளின் பத்தாண்டுச் சிறப்பிதழையும் வெளியிடுவதற்கு முயற்சிக்கிறார்கள். இதைப்பற்றி ஆசிரியர் தலையங்கம் ஒரு அறிவிப்பை விடுத்திருக் கிறது. “சற்றுப் பிந்தினாலும் பத்தாவது ஆண்டு மலரை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மலரின் வெளியீட்டை நடத்தும்போது, அநுராதபுரத்தில் இலக்கிய அமர்வொன்றை யும் நடத்தலாம் என்று பலரும் விரும்புகிறார்கள். அதற்கான ஆதரவும் உதவிகளும் கிடைத்தால் நிச்சயமாக அதைச் செய்யலாம். ஆர்வமுள்ளவர்கள் பங்களிப்புச் செய்யுங்கள்” என்று இதழின் ஆசிரியர் எல். வஸீம் அக்ரம் அறிவித்திருக்கிறார். நல்ல முயற்சி. இந்தக் “கனவு மெய்ப்பட” நிச்சயமாக நாம் ஆதரிக்க வேண்டும்.

இப்பொழுது வந்திருக்கும் 33 ஆவது இதழில், பேராசிரியர் க. கைலாசபதியையும் அவருடைய ஒப்பியல் சிந்தனையையும் ஒப்பிட்டு பாலா சிவாகரன் எழுதிய கட்டுரை கவனத்திற்குரிய ஒன்று. “சமுதாயச் சிக்கல்களையும் மகிழ்ச்சிகளையும் தத்துவார்த்த ரீதியில் ஒப்பீடு செய்து கவிதை, நாடகம், நாட்டார் இலக்கியம், சிறுகதை. நாவல் போன்ற அனைத்து வடிவங்களுக்கும் உயிரோட்டம் கொடுத்துள்ளார்” என்று கைலாசபதியின் ஒப்பியல் ஆய்வைப் பற்றி விளக்கிச் செல்கிறார் பாலா சிவாகரன். இன்னொரு கட்டுரை தாஸிம் அகமதுவைப் பற்றி எல். வஸீம் அக்ரம் எழுதியது. “அம்பாறையில் பிறந்த தாஸிம் அகமது, இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் புதிய வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புகளைப் பல வழிகளிலும் செய்து வருகிறார். கல்விப்புலத்திலும் கலை இலக்கியத்தளத்திலும் இஸ்லாமியத் தமிழுக்கு பெரும் வளம் சேர்க்கிறார்” என்று தாஸிம் அகமதுவைப் பற்றிய ஒரு விரிவான பதிவாக இந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. “காற்றை அழைத்துச் சென்றவர்கள்” - இப்னு ஆயிஷா, ஜமீலின் கவிதை கள் பற்றி எழுதிய விமர்சனமும் ஏனைய கட்டுரைகளாக “காலமும் கருமங்களும்” - அப்துல் ஹமீட் தாஸிம், “பழந்தமிழ் இலக்கியங்கள்” - கே.எஸ். சிவகுமாரன், “பன்மைத்துவப் பயணம்” - நேகம பஸான் ஆகியோருடையவையும் உள்ளன.

புகழ் பெற்ற அமெரிக்க நாவலாசிரியரான கெவின் பேகர் (Kevin Beker) உடனான நேர்காணலின் மொழிபெயர்ப்பு இந்த இதழின் சிறப்பு. தமிழில் நாவல் பற்றிய கரிசனை அதிகரித்துள்ள சூழலில் கெவின் பேகரின் கருத்துகள் கவனத்திற்குரியவை. இன்னொன்று “வத்திக்குச்சி” - திரைப்படத்தைப் பற்றிய பதிவு, சுருக்கமான பதிவில் விமர்சனத்தை வைக்க முடியாமல் திணறும் தன்மை தெரிகிறது. ஆனாலும் கல்லாப் பெட்டியை நிரப்பிக் காசு உழைக்கும் நோக்கிலேயே இந்தப்படம் உருவாக்கப்பட்டுள்ளது என்று சொல்லி விடுகிறது கட்டுரை.

மற்றும் உ. நிஸார் மொழிபெயர்த்துள்ள சிறுகதை ஒன்றும் பாயிஸா அலி, கிரிஷாந், பாஹிரா, ஏ. பாரிஸ், ஜே.பி, எம். பி.எம். நெளபர் (மொழிபெயர்ப்பு) ஆகியோரின் கவிதைகளும் உள்ளன.


அழகிய அமைப்பில் வெளியாகியிருக்கும் இந்த இதழில் புதிய முகவரியை அறிவித்திருக்கிறார்கள். புதிய முகவரி - Padihal Publication, 52, Thurukaragama, Kathatasdigiliya, Anuradhathápura - 50320. தொலைபேசி எண் - 783244255.718423459. இதழின் விலை 60.00.

**குறிப்பு:**

**தினமுரசு நாளிதழில் உங்கள் நூல்களுக்கான விமர்சனமும் அறிமுகக் குறிப்பும் வெளியாவதற்கு, நூலின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள்.**

# அறிவியலும் பழந்தமிழ்ப் பாடல்களும்

- பி.ஏ.கிருஷ்ணன் - 3



புறநானூற்றுப் பாடலொன்றைப் பார்ப்போம்:
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி”
எய்துப என்ப,

இந்தப் பாடலை வைத்துக் கொண்டு தமிழனிடம் விமானம் இருந்தது, விமான ஓட்டியில்லாத விமானத்தைப் பற்றி அறிந்திருந்தான் என்றெல்லாம் கூறப்படுகிறது. இந்த வரிகளுக்கு முன்னால் “மரை இலை போல மாய்திசினோர் பலரே” என்ற வரி வருகிறது. இது பயனின்றி வாழ்ந்து மடிந்தவரைக் குறிப்பிடுகிறது. இந்த வரிகள் புகழுடைபவர்கள் இறந்த பிறகு வானத்தின் “வலவன் ஏவா வான ஊர்தி”யை அடைவார்கள் என்று கூறுகின்றன. எனவே இந்த வான ஊர்தியில் சென்றால் திரும்ப பூமிக்கு வர முடியாது என்பது தெளிவு. திரும்ப வர முடியாத விமானத்தை அன்றே தமிழர் கண்டுபிடித்து விட்டனர் என்று கூறலாமா?

உலக வரலாற்றின் எல்லா கலாசாரங்களிலும் பறப்பதைப் பற்றிய கற்பனைக் கூற்றுகள் பல இருந்திருக்கின்றன. எகிப்து நாகரிகம் விமானங்களை அறிந்திருந்தது என்று பக்கம் பக்கமாக எழுதுபவர்கள் பலர் இருக்கிறார்கள்

பறப்பது என்பது மனிதனின் கனவுகளில் ஒன்று. இந்தக் கனவு நனவாவதற்கு அறிவியல் பல மைல்கற்களைத் தாண்ட வேண்டியிருந்தது. உதாரணமாக எரிபொருள் இல்லாமல் விமானம் பறந்திருக்க முடியுமா?. அக்கனற்சிப் பொறியில்லாமல் (Internal Combustion Engine) விமானம் பிறந்திருக்க முடியுமா? இரப்பர், அலு மினியம் போன்ற பொருள்கள் இல்லாமல் அது உருவாக்கப்பட்டிருக்க முடியுமா? எல்லாவற்றிற்கும் மேலாக பெர்னூலி கொள்கை (Bernouli’s principle) தெரியாமல், நியூட்டனுடைய விதிகள் தெரியாமல், பறப்பது பற்றிய ஒரு அடிப்படைப் புரிதல் இருந்திருக்க முடியுமா?

இந்தக் கேள்விகளுக்கு இதுவரை பதில்கள் கிடையாது.

பரிபாடல்
கருவளர் வானத்திசையிற் தோன்றி
உருவறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்து வளி கிளர்ந்த உளமுழ் ஊழியும்
சென்தீச் சுடரிய ஊழியும் பணியொடு
தன்பெயல் தலை இய ஊழியும் அவையிற்
நுண்முறை வெள்ள முழ்கியார் தருபு
உள்ளிபிகிய இருநிலத் தூழியும்...

இந்தப் பாடல் தமிழனுக்கு உலகம் எப்படிப் பிறந்தது என்பது பற்றி அறிவியற் புரிதல் இருந்தது என்பதற்காக ஒரு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது. இதைப் பற்றிப் பேசுபவர்கள் பாடல் திருமாலைப் பற்றி எழுதியப் பாடல் என்ற தகவலையோ அல்லது குறிப்பாக இந்த வரிகள் வராக அவதாரத்தைப் புகழ்வதற்காக எழுதப்பட்டது என்பதையோ சொல்ல மாட்டார்கள். பரிமேலழகர் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்:

திருமாலே! மண்ணுலகமும் விண்ணுலக மும்பாழ்பட மதியமும் ஞாயிறும் கெடுதலால் அழகிழந்தவானமும் கெட்ட ஊழிகள் முறையே கழிய அதன்பின் ஆகாயஊழியும், காற்றுத் தோன்றிய ஊழியும், அதனினின்றுசெந்தீயும் அதனினின்று மழை முதலியனவும் அவற்றினின்று நிலமும் தோன்றிய ஊழிகளுமாகிய அளவில்லாத காலம்கழிந்தபின் உயிர்கள் உளவாதற் பொருட்டு வராகத்திருக்கோலம்கொண்டு நீ நிலத்தினை யெடுத்தாய்.

இதில் கூறியிருக்கும் எந்தத் தகவலையாவது அறிவியல் சார்ந்தது என்று கொள்ள முடியுமா?

இவை போன்று பல பாடல்கள் மேற்கோள்களாகக் காட்டப்படுகின்றன. அணுவைப் பிளப்பதைப் பற்றி அன்றே நாம் அறிந்திருந்தோம், பைதாகரஸுக்கு முன்பே நாங்கள் செங்கோண முக்கோண விதிகளைக் கண்டுபிடித்து விட்டோம் என்று சொல்லிக் கொள்ப வர்களும் பலர் இருக்கிறார்கள். இவர் களுக்குப் பதில் சொல்வது மிகவும் கடினம். உதாரணமாக போதையனார் பாட்டு என்று தமிழ் கூறும் நல்லுலகத் தில் ஒரு பாடல் வலம் வருகிறது. இது பைதாகரஸுக்கு முன்பே எழுதப்பட்டது என்று பொறியியல் பட்டப்படிப்பு படித்த இளைஞர் ஒருவர் என்னிடம் சொன்னார். பாடல் இது:

ஓடும் நீளம் தனை ஒரேஎட்டுக்
கூறு ஆக்கி கூறிலே ஒன்றைத்
தள்ளி குன்றத்தில் பாதியாய்ச் சேர்த்தால்
வருவது கர்ணம் தானே.

இந்தப் பாடல் பைதாகரஸுக்கு முந்தியது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று நான் சொன்னால். அவர் நம்பத் தயாராக இல்லை. மேலும் இது மிகவும் தோராயமானது, வேலைக்காகாது என்றும் சொன்னேன். அதற்கு அவர் சொன்ன பதில் “துல்லியமாக போதையனார் எழுதியது தொலைந்து போயிருக்கலாம். நமக்கு கிடைத்திருப்பது பாதிதான்.”

முடிவாக

கலீலியோவிற்கு பின் வந்ததுதான் அறிவியல் என்று நாம் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சிலர் கேட்கலாம். ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் உங்கள் விருப்பம். ஆனால் அறிவி யல் என்றால் என்ன என்பதற்கு இன்று உலகத்தில் பெரும்பாலான அறிவியலாளர் ஏற்றுக் கொள்ளும் வரையறை அதுதான்.

நம்மிடம் எல்லாம் இருந்தது என்று சொல்லிக் கொள்வது நம்மிடம் ஒன்றுமே இருந்திருக்க முடியாது என்று மற்றவர்களை நினைக்க வைக்கும். எல்லாம் இருந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏதும் கிடையாது. தமிழ் நமது மொழி. அதற்கு இருக்கும் உண்மையான அழகுகளே போதும். நம்மைப் பொறுத்த வரையில் தமிழ் மதனற்கும் எழுதவொண்ணா அழகுகளை உடைய மொழி. இதற்கு இல்லாத அழகுகளைக் கொண்டு சேர்க்க வேண்டிய தேவையில்லை என்பது எனது தாழ்மையான கருத்து.



"கிளிக்கர்" புகைப்படக் குழுமத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்படுவதையும், புகைப்படப் போட்டியில் வெற்றி பெற்றவருக்கான பரிசில் வழங்கப்படுவதையும், கலந்து கொண்டவர்களையும் காணலாம். (48)

# உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கான கூட்டத்தை உதவி ஆணையாளர் கூட்ட வேண்டும்

## - உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் கோரிக்கை

உள்ளூராட்சி மன்ற செயலாளர்களுக்கான மாதாந்த கூட்டத்தை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் கூட்டுவதற்கு முன்வரவேண்டும். இதற்கான நடவடிக்கையினை வடமாகாண உள்ளூராட்சி திணைக்களம் செயலாளர் ஏற்பாடுசெய்ய வேண்டும். இவ்வாறு உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்று உள்ளூராட்சி சபைகள் அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு பதிலாக பின்னடைவையே நோக்கிச் செல்கின்றது என்பது பொதுவான விவாதம் உள்ளூராட்சி சபைகளில் தலைவர்-செயலாளர், செயலாளர்-தலைவர் முரண்பாடு, உறுப்பினர் முரண்பாடு என்பன வலுப்பெற்றுள்ளதுடன் சிறு பிரச்சினைகள் கூட தீர்க்கப்படமுடியாதுள்ளது.

எனவே உள்ளூராட்சி சபை என்பது முரண்பாடுகளுக்கு அப்பால் அபிவிருத்தியையே முழு நோக்காக கொண்டுள்ளது.

எனவே மக்கள் சபைக்கு வருவதற்கு முன்னர் இடம்பெற்ற மாதாந்த செயலாளர் கூட்டத்தை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கூட்டி உடனுக்குடன் பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

எனவே 'மே' மாதத்தில் இருந்து செயலாளர் கூட்டத்தை மாதாந்தம் நடாத்தி அறிக்கையிடுவதன் மூலம் நிர்வாக பணியையும் மக்கள் பணியையும் சிறந்த முறையில் முன்னெடுக்கலாம். தம்மிடமிருந்து தற்போது வேறொரு உள்ளூராட்சி சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

உள்ளூராட்சி மறு சீரமைப்பு, நல்லாட்சி தத்துவம் மற்றும் நீடித்த சேவை என்பன ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால் மாதாந்த கூட்டம் அவசியம் என்பதனை வலியுறுத்தி கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (92)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி 180,000ரூபா பண மோசடி

(மல்லாவி)

மல்லாவி கிழக்கு 02ஆம் யுனிட் சோமபுரம், இலக்கம் 178 எனும் முகவரியில் வசித்து வரும் செல்வநாயகம் தங்கமலர் என்பவர் தனது மகனை வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி 180000 ரூபா பணம் பெற்று மோசடி செய்துள்ளார் என சாவகச்சேரி மட்டுவில் பகுதியைச் சேர்ந்த அமிர்தன் மஞ்சுளாதேவி (வயது 40) என்பவர் கடந்த வியாழக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

2011.02.18ஆம் திகதி இப்பணம் பெறப்பட்டதாகவும் இதுவரையில் தனது மகனை வெளிநாட்டுக்கு அவர் அனுப்பவில்லையென்றும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

மேலும் சந்தேகநபர் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

# அத்தியாவசிய பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## முற்போக்கு தமிழ்த் தேசியக்கட்சி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமிழ்மக்களது அத்தியாவசியப் பிரச்சினைகளை முதலில் தீர்த்து வைப்பதற்காக அரசாங்கத்துடனான பேச்சுக்களின் போது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முற்போக்கு தமிழ்த்தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட இந்தக் கட்சியின் பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அந்தக்கட்சியின் செயலாளர் எஸ். விஜயகாந்த இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாநகரசபை தற்காலிக தொழிலாளர்களுக்கு நியமனம் வழங்கும் விடயத்தில் பாதிக்கபபட்ட தொழிலாளர்களுக்கு இம்மாதம் நியமனம் வழங்க நடடிக்கை எடுக்கப்படாதவிடத்து அடுத்தமாதம் பொது மக்களையும் தொழிலர்ளர்களையும் இணைத்து பகிரங்கமான போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் வடமாகாணசபை இன்னமும் துணை விதிகளை உருவாக்கவில்லை இதன்காரணமாக உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு கிடைக்கவேண்டிய வரி வருமானம் மத்திய அரசாங்கத்திற்கே சென்று சேர்கின்றது. எனவே வடமாகாணசபைதுணை விதிகளை உருவாக்கி உள்ளூராட்சித் திணைக்களங்கள் நன்மைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும்மென்று கேட்டுக் கொண்டதுடன் குருநகர் பெரிய கோவில் பகுதியிலுள்ள கிணற்றில இருந்து இளம் பெண்ணின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதியின் முன்நிறுத்தப்பட வேண்டும் என்றும் தமது கட்சி கோருவ்தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

# மோட்டார் சைக்கிள் திருட்டு உரும்பிராய் மேற்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் வீதி, உரும்பிராய் மேற்குப் பகுதியில் வசித்து வரும் தவராசா ஜனுஸ் (வயது-22) என்பவரின் மோட்டார் சைக்கிள் கடந்த 15ஆம் திகதி வீட்டிற்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை இரவு 10 மணியளவில் காணாமற் போயுள்ளதாக 16ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

150000 ரூபா பெறுமதியான பஜாஜ் பள்சர் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருட்டுப் போயுள்ளதாகவும் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு இந்தப் பகுதியில் சைக்கிள்கள், மோட்டர் சைக்கிள்கள் என்பன திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் தொழிற் பயிற்சி அதிகார சபையிலுள்ள வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர், புலனாய்வு அலுவலர், சிரேஷ்ட போதனாசிரியர், தொழில் நுட்ப உதவியாளர், பணிப்பாளர் பயிற்சி, திட்டமிடல், ஆராய்ச்சி, அபிவிருத்தி பரிசோதனை மதிப்பீட்டு அலுவலர் பயிற்சி அலுவலர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

திறமையும் வலுவும் உள்ள உடல் உள மற்றும் நற்பண்புகளுடைய 18-45 வயதுக்குட்பட்டவர்கள் தலைவர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, நிபுனதாபியஸ 4ஆம் மாடி 354/2 எல்விட்டகல, மாவத்தை, நாரகேன் பிட்டி. கொழும்பு, 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல்வேண்டும்

பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும். கல்வித்தகைமைகள் ஒவ்வொரு பதவிகளுக்கும் மாறுபட்டதாகும். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பதுடன் தொழில் அனுபவமும் தேவை. (105)

□ □ □

கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி தொடர்பான சேவை முன்தொழிற்பயிற்சிநெறியொன்றைப் பயிலுவதற்கான அனுமதி 2016 ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் இரு பாடநெறிகளுக்காக தமிழ்மொழி மூல விண்ணப்பதாரிகளிடந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாடநெறி சமூக விஞ்ஞானம், நடனம் (பரதம்) கல்வித்தகைமையாக க.பொ.த. (சா/த) க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) கல்வியியற்கல்லூரிகள் பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது மேல்முலையில் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் படி ஸ்ரீ பாததேசிய கல்வியியற் கல்லூரிக்கு விண்ணப்பித்தல் எனக் குறிப்பிடல்வேண்டும்.(105)

# கைதடி இல்ல முதியோர்கள் திருக்கேதீஸ்வரத்துக்கு விஜயம்

(திருநெல்வேலி)

கைதடி முதியோர் இல்லத்தில் தங்கிவாழும் முதியவர்களில் 45 பேர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் திருக்கேதீஸ்வரம், மற்றும் மன்னார் அன்னை திரேசா முதியோர் இல்லம் போன்றவற்றுக்குப் பேருந்தில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இல்லத்தைச் சேர்ந்த சில உத்தியோகத்தர்களும் சென்றுள்ளனர். திருக்கேதீஸ்வரம் மடு போன்ற ஆலயங்களுக்கு செல்லும் இவர்கள் அங்கு வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் அன்னை திரேசா முதியோர் இல்லத்துக்குச் செல்லவுள்ளனர்.

அங்குள்ள முதியவர்களுடன் அளவளாவி தங்கள் அனுபவத்தை பலவாறு பகிர்ந்து கொண்டனர்.

கைதடி முதியோர் இல்லத்திலிருந்து அடிக்கடி இப்படியான யாத்திரைகளையும் சுற்றுலாக்களையும் மேற்கொள்வதன் மூலம் அங்குள்ள முதியவர்கள் புதிய உற்சாகத்தையும், உத்வேகத்தையும் பெற்றுக்கொள்வதாக முதியவர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# வற்றிச்செல்கிறது நிலத்தடி நீர் காத்திருக்கிறது குடிநீர் பஞ்சம்

## மாகாணசபை விழிப்படைவது எப்போது?

([illegible]ணம்)

யாழ். [illegible]ல் சராசரி மழை வீழ்ச்சியை விட வெப்பத்தின் அளவு கூடுதலாக உள்ளதால் நிலத்தடி நீரைப் பெற முடியாதுள்ளது.

எனினும் சர்வதேச நியமத்திற்கு ஏற்ப 2015 இல் 85 வீதமான குடிதண்ணீரும், 2025 இல் 100 வீதமான குடிதண்ணீரும் வழங்க வேண்டிய அவசர அவசிய தேவை எழுந்துள்ளது.

இதனை வடமாகாணசபை புரிந்து விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஓய்வு நிலை சிரேஷ்ட பொறுப்பதிகாரி (வவுனியா, மன்னார்) எம்.என்.இளையராஜா தெரிவித்தார். குடி தண்ணீர் விடயம் ஏன் வடமாகாண சபையினரால் அரசியலாக்கப்படுகின்றது. என்பது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டு நீர்வழங்கல் 1985 ஆம் ஆண்டில் யுனிசெவ் நிறுவனம்கிராம மட்ட குடி தண்ணீர்த் திட்டமாக நடைமுறைப்படுத்தியது.

தற்போது நகரமயமாக்கலில் நகர திட்டமாக மாற்றம் பெற்று அதிகமாக நீர் நுகரப்படுவதால் உவர்நீராக மாறுகின்றது. அதே வேளை விவசாயமும் உச்ச அளவில் பயன்படுத்துகின்ற அதே [illegible]ரம் பசளை விசிறலால் நிலத்தடி நீர் மாசடைகிறது.

இதனால் நிலத்தடி நீரைப்மையமாகக் கொண்டு எந்தவொரு [illegible] திட்டங்களையும் முன்ன[illegible]முடியாது என்பது சகல [illegible]தாரணமாக விளங்கிக் கொள்ளக் கூடியது.

உதாரணமாக புத்தளம், குருநாகல் பிரதேசங்களில் நிலத்தடி நீர் உவரானதால் திட்டங்கள் யாவும் கைவிடப்பட்டு தற்போது மழைநீர்த் திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலும் நிலத்தடி நீர் பல்வேறு காரணங்களினாலும் மக்களை நோயில் இருந்து பாதுகாக்க வேண்டியிருப்பதனால் கைவிடப்படவேண்டியுள்ளது.

இந்த விதி முறைகளுக்கு அமையவே 65 வீதம் விவசாயத்திற்கும், 35 வீதம் குடி தண்ணீருக்கும் இரணைமடு நீரைப் பயன்படுத்தலாம் என்பது பொது உண்மையாகும்.

இத்திட்டமும் மாகாணசபையின் வரண்முறைக்குட்பட்டதால் ஏனைய மாகாணங்களின் அனுபவ நடைமுறையே இங்கும் புலப்பட வேண்டும் என்பது யதார்த்தமானது.

எனவே இவ்விடயம் மத்திய அரசிற்கு கொண்டு செல்வது என்பது என்ற அதிஉந்தல் நிலைக்கு அப்பால் வடமாகாண சபை இத்திட்டத்திற்கு துணிந்து வலுக்கொடுத்தால் இது வடமாகாணத்தின் பயன்தரு திட்டம் என்பதுடன்

முதன் முதலாக பாரிய 2300 கோடி ரூபாவை பயன்படுத்திய உட்கட்டுமானம் மற்றும் விவசாய குடிதண்ணீர் ஆகிய முப்பணித் தேவைகளை நிறைவேற்றியதாகும். என்றார். (92)

## புத்தாண்டுச் சந்தைக்கு 60 ஆயிரம்ரூபா ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைசசினால் நடாத்தப்பட்ட புத்தாண்டு சந்தைக்கான நிதியாக தலா 60, 000 ரூபா வீதம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திவி நெகும திணைக்களம் ஊடாக இந்த நிதியை கிளிநொச்சி மாவட்ட செயலருக்கு அனுப்பி வைத்துள்ளதாக சமுர்த்தி உதவி ஆணையாளர் எம்.எம்.இர்பான் தெரிவித்தார்.

இந்த நிதியை மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதேச செயலர்களுக்கு பகிர்ந்தளிக்க உள்ளார்.

புத்தாண்டுச்சந்தை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் இரண்டு நாட்கள் நடைபெற்றபோது பல உள்ளூர் உற்பத்தியாளர்கள் சிறப்பான சந்தை வாய்ப்பை பெற்றதாகவும் அவர் தெரிவித்தார். (90)

## விழிப்புணர்வு செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஞானிமடம் கிராமத்தில் இளைஞர் யுவதிகளுக்கான விழிப்புணர்வு செயலமர்வு மிக அண்மையில் நடாத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள உளவளப் பிரிவின் அலுவலர் தேவராஜா துஸ்யந்தனால் இந்த விழிப்புணர்வு நிகழ்வு திட்டம் நடாத்தப்பட்டது.

இன்றைய நிலையில் நெருக்கடி மிக்க வாழ்வில் இளைஞர்களும் யுவதிகளும் எவ்வாறு உள நெருக்கடியிலிருந்து மீள்வது தொடர்பாகவே கருத்துரைகள் வழங்கப்பட்டன.

சமூகசேவைகள் அமைச்சினதும், மாவட்ட செயலாளரதும் வழிகாட்டலில் மாவட்ட செயலகத்தின் உளவளப் பிரிவினரால் இது போன்ற நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (90)




இறுதியுத்தத்தில் தனது இரண்டு கால்களையும் இழந்த இயக்கச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கு சிறுவியாபார முயற்சிக்காக வாழ்வாதார உதவித்தொகை வழங்கப்பட்டது. வலி. வடக்கு பிரதேச சபைத் துணைத்தவிசாளர் சண்முகலிங்கம் சஜீவனின் வேண்டுகோளுக்கமைய ஜேர்மனில் இயங்கும் மனிதாபிமானத் தொண்டு நிறுவனம் இதற்கான அனுசரணையினை வழங்கியிருந்தது. (48)

## முல்லை மாவட்டத்தில் சா/த பரீட்சை 7 மாணவர்களுக்கு உயர் பெறுபேறு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2013ஆம் ஆண்டு க.பொ.த. சா/த பரீட்சையில் 07 மாணவர்கள் சகல பாடங்களில் உயர் சித்தியினைப் பெற்றுள்ளனர்.

முல்லை மாவட்டத்தில் யுத்தத்தின் பின் சமாதான காலத்தையடுத்து இந்த ஆண்டு அதிகளவான மாணவர்கள் உயர் தரத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் வித்தியானந்தாக்கல்லூரியின் பேரினபராஜா டயல்சியர், சிவலோகநாதன் வினுஜா ஆகியோர் சகல பாடங்களிலும் உயர் சித்தியினை பெற்றுள்ளனர் .

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி செல்வநாயகம் சுவனேத்திரா, கண்ணதாசன் சகானா ஆகியோர் சகல பாடங்களிலும் உயர் சித்தியினைப் பெற்றுள்ளனர்.

செம்மலை மகாவித்தியாலயத்தில கணேசலிங்கம் நிதர்சனா என்பவரும் சகல பாடங்களிலும் அதிஉயர் சித்தியினைப்பெற்றுள்ளார். விசுவமடு மகாவித்தியாலயத்தில் கலாதேவன் ஜெனார்த்தனி என்பவரும் சகல பாடங்களிலும் உயர் தர சித்தியினைப்பெற்று பாடசாலைக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

## பதிவிறக்கப் பெட்டகம்

என் புத்தகத்தைப் படி என்று ஒருவரிடம் சொல்வதே ஒரு விதமான வன்முறை என்று தமிழின் மூத்த இலக்கியவாதி ஒருவர் என்னிடம் சொன்னார். பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள், எழுதுவது மட்டுமே தம் கடமை என்று இருந்து விடுபவர்கள். எழுத்துதான் பேசவேண்டும், எழுத்தாளன் அல்ல என்பவர்கள். நல்ல எழுத்து காலம் காலமாக நிலைத்து நிற்கும் என்பது உண்மைதான். அதற்குப் பெரும் விளம்பரங்கள் ஏதும் தேவையில்லை. அது முதல் பதிப்பு காணும்போது ஆயிரம் பிரதிகள்கூட விற்காமல் இருந்திருக்கலாம். ஆனால் ஐம்பது ஆண்டுகள் கழித்து அந்தப் புத்தகம் மட்டும்தான் நிலைத்திருக்கும். இடையில் வந்த வெற்று ஆரவாரக் கூச்சல் மிகுந்த எண்ணற்ற புத்தகங்கள் சில லட்சம் பிரதிகள் விற்று, பின் காணாமலேயே போயிருக்கலாம்.

நல்ல இலக்கியம் என்பது அது விற்கும் எண்ணிக்கையில் அல்ல, அது எவ்வளவு காலம் தாண்டி நிற்கிறது என்பதிலும் எத்தனை தலைமுறை வாசகர்களை பாதிக்கிறது என்பதிலும்தான் என்பதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் நாம் அனைவருமே இப்படிப்பட்ட இறவா இலக்கியங்களை மட்டும்தான் படிக்கிறோமா? எழுத்து பல காரியங்களைச் செய்கிறது. அறிவையும் தகவலையும் தரும் அ-புதினங்கள் பல. அவற்றைத் தாண்டி, கிளுகிளுப்பையும் சிரிப்பையும் தரும் எழுத்துகள், மர்ம நாவல்கள், பயமுறுத்தும் பேய்க் கதைகள், வெறும் வாசிப்பு இன்பத்தை மட்டும் தரும் பல்ப் ஃபிக்ஷன். சில கதைகள் மட்டுமே சிந்தையைத் தூண்டி, நம் வாழ்க்கையையே மாற்றக்கூடியவை. ஆனால் நாம் அவற்றை மட்டுமா படிக்கிறோம்? அனைத்தையும்தானே படிக்கிறோம்?

எதைப் படிப்பது என்பதில் நான் ஒரு வரைமுறையை வைத்துக்கொள்வதே இல்லை. ஒரே நேரத்தில் என்னால் மிகவும் சீரியஸான இலக்கியத்தைப் படிக்கமுடியும், 'குப்பை' என்று பலராலும் ஒதுக்கித் தள்ளப்பட்ட, மேலோட்டமான பல்ப் பிக்ஷனையும் படிக்கமுடியும். கடலை சுற்றிவந்த காகிதத்தில் உள்ள பாதி கிழிந்த துணுக்கைக்கூட விடாமல் படிப்பவன் நான். இதை மட்டும்தான் படிக்கவேண்டும் என்று பாடமெடுக்கும் சட்டாம்பிள்ளைகளை நான் கண்டுகொள்வதே இல்லை. இதையும் படியுங்கள் என்று சொல்வோரையே நான் மதிக்கிறேன். – பத்ரி சேஷாத்ரி

இதையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். உன்னிடம் சொல்கிறேன். நீ இவற்றைப் படித்துப் பார்த்து சிந்தித்து ஒரு முடிவுக்கு வா என்று சொல்லாமல் கையைப் பிடித்துத் தரதரவென இழுத்துச் செல்வதுபோல் எழுதப்படும் புத்தகங்களோடு எனக்குச் சிறு வயதிலிருந்தே உறவு இருந்தது கிடையாது. – சுந்தர ராமசாமி

இலக்கியம் பொருள் தன்மையானது. இது எண்பதுகளில் தமிழில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. அதுபோல் லீனியர் கதையாடல் பலவீனமானது. எனினும் லீனியர் கதையே பெரிய நாவல்களில் தொடர்வதால் அவை 'போர்' அடிக்கின்றன... இல்லை, "போர்" அடிக்கிறது என்று நேரத்தை பயனுள்ளது, பயனற்றது மற்றும் இன்பநோக்கு ஆகியவற்றுடன் இணைத்துப் பேசுவது என்பது ஒரு மரபான அறிதலின் அல்லது நுகர்தலின் அடிப்படையிலிருந்து வருகிறது. போரடிக்கிறது என்பதைவிட அது பழகிப்போன மந்தையான ஒரு மொண்ணை வாழ்வை திரும்பத் திரும்ப ஏற்கவும், உற்பத்தி செய்யவும் செய்கிறது என்பதே. அல்லது "போர் அடித்தல்" என்பது நுகர்வு அடிப்படையிலான ஒன்று. இலக்கியம் நுகர்வை தாண்டிய ஒன்று. அதாவது இலக்கியம் வாசிப்பவனை மந்தையாக கருதாமல் பங்கேற்பவனாக, சிந்திப்பவனாக, தனது மூளையை கசக்குபவனாக அதன்மூலம் புதிய ஒரு அறிதலை பெறுபவனாக மாற்றுவது. இந்த புள்ளியில்தான் அமைப்பியல் துவங்கி பின்நவீனம் வரையிலான சிந்தனைகள் கவனம் கொள்கின்றன. இண்டர்டெக்ஸ்டுவாலிடி, நான்-லீனியர், பாலிம்செஸ்ட் உள்ளிட்ட புதிய வகை எழுத்து வாசகனை பயிற்றுவிப்பதன் மூலம் பிரதியை கட்டும் செயலில் ஈடுபட வைக்கிறது. அதாவது இலக்கியம் என்பது ஒரு பொழுதுபோக்கு சாதனம் அல்ல, அது ஒரு சமூகச்செயல்பாடு என்பதை உணர்த்துவதாக அமைகிறது. அச்செயலில் படைப்பூக்கத்துடன் ஈடுபட வைக்கிறது. – ஜமாலன்

# ஐரோப்பிய முதலீட்டு வங்கியுடன் கைகுலுக்குகிறது வர்த்தக வங்கி

## நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஊக்கம்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (SMES), சக்திவள ஆற்றல், மீள் சக்தித்துறை ஆகிய பிரிவுகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் வகையில் கொமர்ஷல் வங்கி ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB) உடன் உடன்படிக்கை ஒன்றை செய்துள்ளது.

இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள EIB SME பசுமை சக்தி கடன் திட்டத்தின் கீழ் இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

SME நிதி உதவிக்கான ஆகக் குறைந்த திட்டத்தின் பெறுமதி சக்திவள ஆற்றல் மற்றும் மீள் சக்தி ஆற்றல் பிரிவில் 18 மில்லியன் ரூபா முதல் 90 மில்லியன் ரூபாவாக இருக்க வேண்டும் என வங்கி அறிவித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் மேற்படி பெறுமதிக்குரிய திட்டத்தில் 50% வரை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இக்கடனைப் பெற்றுக் கொள்பவர்கள் நீண்ட கால அடிப்படையில் மீளச் செலுத்துவதற்கான வசதியையும் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு இதற்கான கவர்ச்சிமிக்க வட்டி வீதம் வருடமொன்றுக்கு 8% மாக இருக்கும்.

தொழிற்சாலை நிர்மாணம், தற்போதைய தொழிற்சாலைகளின் அல்லது வர்த்தக கட்டடங்களின் புனர் நிர்மாணம், தொழிற்பாடு மூலதனத்தின் அதிகரிப்பு ஆகிய பிரிவுகள் கடன் பெறுவதற்கான பிரதான பிரிவுகளாக கருத்திற் கொள்ளப்படும்.

தேசிய பொருளாதாரத்துக்கு மிகவும் அத்தியாவசியமானவை எனக் கருதப்படும் பிரிவுகளே இந்தக் கடன் திட்டத்துக்கான பிரதான பிரிவுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே இந்தக் கடன் திட்டத்தில் பங்கேற்பதில் நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம் என்று கூறினார் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி டயஸ்.

SME பிரிவுக்கு ஆதரவளிப்பதில் வங்கி எப்போதுமே அர்ப்பணத்துடன் செயற்பட்டு வருகின்றது. தற்போது அது சக்தி வளம் மற்றும் நிரந்தர வர்த்தகப் பிரிவு என்பனவற்றை ஊக்குவிப்பதிலும் பங்களிப்பு வழங்கவுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

# வறட்சியை எதிர்கொள்வது எப்படி விவசாயப் பணிப்பாளர் விளக்கம்

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வறட்சி நிலைமையிலிருந்து பழப்பயிர்ச் செய்கைகளை விவசாயிகள் பாதுகாத்து கொள்ளவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.

விவசாய நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நிலவுகின்ற வறட்சி காரணமாக சிறுபோகப் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளமுடியாத நிலைமை காணப்படுகின்றபோதும், வறட்சியைத் தாங்கக் கூடிய பயிர்செய்கைகளை மேற கொள்வதற்கு விவசாயிகள் முன்வரவேண்டும்.

குறிப்பாக தற்போதைய வறட்சியினால் பழப்பயிர்ச் செய்கை அழிவடைந்து வருகின்றது. இந்த நிலையில் பழப்பயிர்செய்கையில் ஈடுபடுகின்றகின்ற விவசாயிகள், மண்ணின் ஈரத்தன்மையை பேணும் வகையில் பழப்பயிர்களின் அடியில் பத்திரக்கலவை இடுதல், தூவல் நீர்ப்பாசன முறையில் சொட்டு நீர்ப்பாசன முறைகளைக் கையாண்டு வறடசி காலத்தில் இப்பழப் பயிர்களை பாதுகாக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மீனவர் விவகாரம் தீராத பிரச்சினை உயர்மட்டப் பேச்சு அவசியம்

## அமைச்சர் ராஜித கோரிக்கை



மீனவர் பிரச்சினைகள் குறித்து அமைச்சு மட்டத்தில் உயர் நிலையிலான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டமென மீன்பிடித்துறை மற்றும் கடல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்திய மீனவர்கள் அத்து மீறல்களில் ஈடுபடுதல் மற்றும் கைதுகள் தொடர்பில் இரு நாடுகளினதும் அமைச்சு ரீதியான பேச்சுவார்தததை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த மாதத்தில் இவ்வாறான ஓர் பேச்சுவார்த்தை நடாத்த நேரத்தை ஒதுக்கித் தருமாறு ஏற்கனவே இந்திய மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளினதும் மீனவர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கு முனனதாக அமைச்சு மட்டப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழக அரசாங்கம் எதிர்வரும் மே மாதம் 12, 13 ஆம் திகதிகளில் இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு இடையில் கொழும்பில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட உள்ளதாக அறிவித்துள்ளது.

எனினும், இது குறித்து உத்தியோகபூர்வமாக இதுவரையில் அறிவிக்கப்படவில்லை எனவும் கடிதங்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், இலங்கை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை எனவும் மீன்பிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

# ஆற்றில் பாய்ந்தது வாகனம் மூச்சுத்திணறி ஐவர் மரணம்

கண்டியிலிருந்து கதிர்காமம் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகியதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். கதிர்காமம் தெட்டகம பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.30 அளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனம் வீதியை விட்டு விலகி தெட்டகம ஆற்றில் வீழ்ந்துள்ளது. வாகன சாரதி உறங்கியதனால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் உயிரிழந்துள்ளனர். ஐந்தரை வயதான குழந்தையொன்று விபத்தில் உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# வறுமை இப்போது இல்லை அமைச்சர் பியசேன பெருமிதம்



நாட்டு மக்களிடம் முன்னரை விட தற்போது பணம் புழக்கத்தில் இருப்பதாகவும் வறுமை இருப்பது ஐக்கிய தேசிய கட்சிக்கே அன்றி நாட்டு மக்களுக்கு அல்லவென சிரேஷ்ட அமைச்சர் பியசேன கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தாண்டுக் காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பது வழமையானது. புத்தாண்டுக் காலத்தில் பொருட்களுக்கு அதிக கேள்வி நிலவுவதே இதற்கு காரணம்.

புத்தாண்டுக் காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் நடந்துள்ளது.

பொருட்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை எமது அரசாங்கத்தினால் குறைக்க முடிந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி கூறுவது போல் மக்கள் வறுமையில் வாடவில்லை. எந்தப் பிரதேசத்தில் மககள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர்? மூன்று வேளை சாப்பிடாதவர்கள் எந்தப் பிரதேசத்தில் உள்ளனர்?.

இவை எதிர்க்கட்சிகளின் வெற்று போராட்ட கோஷங்கள். புத்தாண்டுக் காலத்தில் பொருட்களின் தட்டுப்பாடு குறித்து எதிர்க் கட்சிகள் கூக்குரலிடுவது இன்று வாடிக்கையாகமாறியுள்ளது என்றார்.

# வினைத்திறனுடன் சேவையாற்றுவது எப்படி கிராம அலுவலர்களுக்கு விசேட பயிற்சி

கிராமிய பிரதேசங்களில் வாழும் அடிமட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் அப்பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை காத்திரமானதாக முன்னெடுப்பதற்காக நாடளாவிய 14,000 கிராம சேவை அதிகாரிகளுக்கும் தெளிவூட்டும் செயற்றிட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது.

இதற்கிணங்க நாட்டின் அனைத்துப் பிரதேச செயலக பிரிவுகளையும் அடிப்படையாகக் கொண்ட செயற்றிட்டங்கள் அடுதத மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் கிராம சேவை அதிகாரிகளை இது தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்வொன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்டதுடன் அதன் பின்பு இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படாமலிருந்தது.

மீண்டும் இச்செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதுடன் பிரதேச செயலகப் பிரிவுகளெங்கும் கிராம சேவகர்கள் ஒன்று கூட்டப்பட்டு இத்திட்டம் பற்றி அவர்களுக்கு தெளிவூட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் பெருமளவிலான கிராம சேவகர் வெற்றிடங்கள் கடந்த காலங்களில் நிலவிய போதும் அண்மையில் அரசாங்கம் 4000 புதிய கிராம சேவகர் நியமனங்களை வழங்கி வெற்றிடங்களை நிரப்பியது. புதிய கிராம சேவகர்களுக்கான மூன்று மாத பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அதனையடுத்து மேற்படி செயற்றிட்டம் தொடர்பாக அவர்களுக்குத் தெளிவூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கிராமிய பிரதேசங்களை நகர்ப்புறங்களைப் போன்று சகல வசதிகளுடன் கட்டியெழுப்புவதே ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் நோக்கமாகும்.

இந்த வகையில் கிராமிய மட்ட மக்களுக்கு நீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் அப்பிரதேச உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் மேற்படி செயற்றிட்டத்தின் நோக்கமாகுமெனவும் அமைச்சு தெரிவித்தது.

# அரசுக்கு இப்போது போதாத காலம் ரஞ்சன் ராமநாயக்க எம்.பி. சொல்கிறார்

(கொழும்பு)

தோல்வி என்ற வார்த்தையை அரசாங்கத்தினால் சகித்துகொள்ள முடியவில்லை எனவும் தோல்வி என்ற வார்த்தையை கேட்டுக்கும்போது அரசாங்கத்தின் தலைவர்களுக்கு நடுக்கம் ஏற்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தோல்வி என்றதும் அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு வியர்க்க ஆரம்பித்து விடுகிறது. செய்த பாவங்கள் நினைவுக்கு வருகிறது.

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பற்றி அரசாங்கத்தின் மூத்த அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வாவே சரியான விமர்சனத்தை முன்வைத்தார்.


உண்மையை புரிந்துகொள்ள முடியாத அமைச்சர் டிலான் பெரேரா, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு நிறத்தை அறிய முடியாத கண் கோளாறு ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் இதனை விட அபாய விளக்கை காண்பிக்க மக்கள் காத்துள்ளனர்.


அனைத்து மாகாணங்களுக்கும் ஒரே நேரத்தில் தேர்தலை நடத்தினால் அரசாங்கத்திற்கு எப்படியான தோல்வி ஏற்படும். அரசாங்கத்தின் காலம் முடிந்து விட்டது.


அரசாங்கம் ஜெனிவாவில் தோற்றது. மின்சார நாற்காலியில் தோற்றது. இறுதியில் தேர்தலிலும் தோற்றதுப் போனது. சுருக்கமாகக் கூறினால், கெட்ட காலம் நெருங்கும் போது வீட்டில் வளர்க்கும் கிளிகளும் பறந்து செல்லும். காரணம் ஆபத்தின் முன் எச்சரிக்கை விலங்குகளுக்கே முதலில் தெரியும் என்றார்.

25) கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து கடைசியாக வந்துள்ள கூட்டில் வினாக்குறி வந்துள்ள இடத்தில் வரவேண்டிய ஆங்கில எழுத்தையும் எண்ணையும் கண்டு கோடிடுக.




26) கீழே தரப்பட்ட ஒழுங்கை அவதானித்து புள்ளிக்கோட்டில் வரும் விடையைக் கண்டு கீறிடுக.




27) 20மீற்றர் காணி ஒன்றை சிரமதானம் செய்தவற்கு நான்கு மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவைப்பட்டதெனின் 10 மீற்றர் காணி ஒன்றினை அதே மனிதர்கள் சிரமதானம் செய்வதற்கு தேவைப்படும் நாட்கள் எத்தனை?

(i) 10　　(ii) 20　　(iii) 5


28) தற்போது அக்காவுக்கு வயது 17 வருடங்கள் ஆகும் தம்பியின் வயது 5 வருடங்கள் ஆகும். இன்னும் எத்தனை வருடங்களில் அக்காவின் வயது தம்பியின் வயதைவிட இரு மடங்காக இருக்கும்.

(i) 7　　(ii) 6　　(iii) 8

29) விஜேயினதும் அஜித்தினதும் நிறைகளின் .டுத்தொகை 43kg ஆகும். விஜேய் , அஜித் , வினோத் ஆகியோரது நிறைகளினது கூட்டுத்தொகை 57kg ஆகும் எனின் வினோத்தின் நிறை எத்தனை கிராம்?

(i) 14,000g　　(ii) 13,000g　　(iii) 10,000g

30) ஒரு சதுர முகியின் ஆறு பக்கங்களிலும் 1,2,3,4,5,6 என்னும் இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள விதம் பின்வரும் உருக்களில் காணப்படுகின்றது. இதற்கேற்ப இல்க்கம் இற்கு எதிர்த்திசையில் உள்ள எண் யாது?




(i) 6　　(ii) 5　　(iii) 3

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு




கடந்த செவ்வாய்க்கிழமை வெளியான வினாத்தாளின் தொடர்ச்சி....




- **7,8 ஆம் வினாவுக்கு முதலில் தரப்பட்ட கூற்று பிழையானதாகும் இக்கூற்று ஏன் பிழையானது என்பதைக் குறிக்கும் விடை யாது?**


07) பௌர்ணமி தினத்தன்று காணப்பட்ட பிறைச்சந்திரன் குளிர்ச்சியான ஒளியை வீசிக் கொண்டிருந்தது
(i) பௌர்ணமி தினத்தில் ஒளி குறிர்ச்சியாக இருப்பதில்லை
(ii) பௌர்ணமி நிலவு ஒளி வீசுவதில்லை
(iii) பௌர்ணமி நிலவு பிறை வடிவில் காணப்படுவதில்லை




08) பின்வரும் வாக்கியம் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்யவேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க. தோட்டத்தில் உள்ள தென்னை மரத்தில் மாங்காய்கள் அதிகம் காணப்பட்டன.
(i) தோட்டத்தில் என்பதற்குப்பதிலாக **"காட்டில்"** என்பதை இடுதல்
(ii) தென்னை என்பதற்குப் பதிலாக **"பனை"** என்பதை இடுதல்
(iii) மாங்காய்கள் என்பதற்குப் பதிலாக **"தேங்காய்கள்"** என்பதை இடுதல்

- **9,10 ஆம் வினாக்களுக்கு புள்ளிக்கோடு உள்ள இடத்தில் வரவேண்டிய உருவைக்கண்டு அதன் கீழ் கீறிடுக.**


09)  ..............................

(i) 　　(ii) 　　(iii) 

10)  ..............................

(i) 　　(ii) 　　(iii) 


- **கீழே உள்ள உருக்கள் இரண்டு தராசில் நிறுக்கப்பட்ட முறையைக் காட்டுகின்றன இரண்டு தராசுகளும் சமநிலையில் உள்ளன அதற்கேற்ப 11,12ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




11) △ நிறை 250 g எனின் ○ நிறை என்ன?
(i) 250g　　(ii) 125 g　　(iii) 500g


12) □ + △ + ○ = நிறை என்ன?
(i) 875 g　　(ii) 750g　　(iii) 625 g


- கீழே தரப்பட்ட செய்கையை அவதானித்து 13 ,14 ஆம் வினாக்களுக்கு புள்ளிக்கோடு உள்ள இடத்துக்கு வரக்கூடிய விடையைக்கண்டு கோடிடுக.

13)  ..........................



(I) (ii) (iii)

14)  ..........................



(i) (ii) (iii)

15) பென்சில் ஒன்றினதும் பேனை ஒன்றினதும் விலை 27 ரூபா ஆகும். பேனை ஒன்றின் விலை பென்சில் ஒன்றின் விலையின் இரு மடங்கு ஆகும். எனின் பேனையின் விலை யாது?

(i) 18 ரூபா (ii) 9 ரூபா (iii) 21 ரூபா


16) கோயில் மணி ஒவ்வொரு 40 நிமிடத்துக்கும் ஒரு முறை மணி அடிக்கும் மு.ப 8.50 இற்கு முதல் மணி அடித்தது எனின் மூன்றாவதாக மணி அடிக்கும் நேரம் யாது?

(i) 9.10 (ii) 10.10 (iii) 11.10

17) கடை ஒன்றில் இருந்த மாம்பழங்களில் $\frac{1}{3}$ பங்கு விற்கப்பட்டது. $\frac{1}{6}$ பங்கு பழுதடைந்து விட்டதால் வீசப்பட்டது. கடையில் மீதியாக 18 மாம்பழங்கள் எஞ்சி இருந்தன. எனின் கடையில் இருந்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

(i) 36 (ii) 72 (iii) 108



18) கீழே படத்தில் சில பெட்டிகள் ஏதோ ஒரு வடிவத்திற்கு ஏற்ப அடுக்கப்பட்டுள்ளது. அதில் எத்தனை பெட்டிகள் அடுக்கப்பட்டுள்ளன?





(i) 10 (ii) 6 (iii) 8



- கோலத்திற்கேற்ப புள்ளிக்கோட்டில் வரும் பொருத்தமான உரு 1,2,3 ஆகியவற்றிடையே யாது


19)  


(i) (ii) (iii)

20)  

(i) (ii) (iii)

- கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து 21,22ஆம்வினாக்களுக்கு விடை தருக.




21)  இன் பெறுமானம் என்ன?

(i) 21 (ii) 40 (iii) 32

22)  இன் பெறுமானம் என்ன?

(i) 20 (ii) 25 (iii) 24

23) நதியா 2 ரூபா பெறுமதியான டொபிகளையும் 3 ரூபா பெறுமதியான டொபிகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினாள். இந்த டொபிகளின் மொத்தப் பெறுமானம் ரூபா 100 எனின் அவள் வாங்கிய டொபிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

(i) 40 (ii) 34 (iii) 24

24) எண்கோலத்தை அவதானித்து -?- குறி வந்துள்ள இடத்தில் வரவேண்டிய விடையைக் கண்டு கீறிடுக.

| | | |
|---|---|---|
| 4 | | 5 |
| | 81 | |
| 6 | | 3 |


| | | |
|---|---|---|
| 5 | | 6 |
| | 121 | |
| 7 | | 4 |

| | | |
|---|---|---|
| 5 | | 3 |
| | ? | |
| 6 | | 2 |

(i) 64 (ii) 45 (iii) 36

# குளங்களைப் புனரமைப்பதன் மூலமே வறட்சி நிலையை போக்க முடியும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக வறட்சியை எதிர்கொள்கின்ற பிரதேசமாக பூநகரி பிரதேசமே அமைந்துள்ளது எனவே பூநகரி குள நிர்மாணத் திட்டத்தை துரிதமாகச் செயற்படுத்துவதனூடாகவே இப்பிரதேசத்தில் மக்களின் இருப்பை தக்கவைத்துக் கொள்ள முடியும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பி னர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொல்லக்குறிச்சி செல்விபுரத்தில் பூநகரி குள நிர்மாண செயற்பாட்டுக்கான அலுவலகத்தினை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

பூநகரி குளத்தினை அமைப்பதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு முதற்கட்டப் பணிகளை ஆரம்பிப்பதற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை சுமார் பத்து மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

அதனடிப்படையில் அதற்கான ஆரம்ப கட்டப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இத்திட்டத்தினை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக வறட்சியை எதிர்கொள்கின்ற பிரதேசமாக பூநகரி பிரதேசமே அமைந்துள்ளது அவர் அங்கு நிலவும் குடிநீர்ப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வழங்குவதற்கான செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக நாம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி நகரை அண்டிய பிரதேசங்களில் மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் சுமார் 1700 மில்லியன் ரூபா செலவில் பத்தொன்பது கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக 40 ஆயிரம் பேருக்கு சுத்தமான குடிநீரை விநியோகிப்பதற்கான பாரிய திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது, இவ்வருட இறுதிக்குள் அதன் பயனை மக்கள் பெறுவார்கள்.

இதுபோன்று பூநகரி மக்கள் எதிர்கொள்ளும் குடிநீர்ப் பிரச்சினைக்கும் நிரந்தர தீர்வுகாணும் வகையில் யாழ்-இரணைமடுத்திட்டத்தை நடைமுறைப் படுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டது ஆனால் இத்திட்டத்தை செயற்படுத்துவதில் சர்ச்சைகள் உருவாகியுள்ளன என்பதை மக்கள் அறிவார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆயினும் பூநகரிப்பிரதேசத்தில் உள்ள குளங்களைப் புனரமைத்து கடலுடன் கலக்கும் நீரைசேமிப்பதற்கும் நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் காலப்போக்கில் பூநகரி பிரதேசத்திலும் குடிநீர்ப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை எட்ட முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் தெற்கு வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலயத்தின் பொதுக்கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள் ளது.

ஆலய நிர்வாக சபை தலைவர் சோ.பரமநாதன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஆலய மஹோற்சவம் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்து நிர்வாக சபை அங்கத்தவர்களையும் உபயகாரர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஆராதனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சத்தியசாயி பாபாவின் ஆராதனை நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாலவிகாஷ் மாணவர்களின் சர்வமத ஒற்றுமை எனும் தொனிப்பொருளிலான இசையும் அசைவும் 'சத்தியசாயி பாபாவின் அவதார மக்த்துவம்' சிறப்புரை, பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் அற்புதங்கள், சேவைகள் தொடர்பான வீடியோ தொகுப்பு, வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக்குழு தலைவர் எஸ்.ஆர்.சரவணபவனின் அறிமுகவுரையும் இசை ஆராதனையும் இடம்பெறவுள்ளது.

# நிறைவடைகிறது ஆசிரிய பயிற்சி நெறி

(திருநெல்வேலி)

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியை மேற்கொண்டிருக்கும் ஆசிரிய மாணவர்களின் பயிற்சிக் காலம் எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதியுடன் நிறைவடைவதாகத் தெரிவிக்கபபட்டுள்ளது.

16 ஆம் திகதியிலிருந்து வடமாகாண கல்வியமைச்சினால் இவர்களுக்கான பாடசாலைகள் வழங்கப்படவுள்ளன.

ஜூன் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதிவரை இவ்வாசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை ஆசிரிய கலாசாலையில் நடைபெறும். இம்முறை ஆசிரிய கலாசாலை அனுமதிக்காக புதிய பயிற்சியைப் பெறுவதற்கு சுமார் 800 பேர் விண்ணப்பம் செய்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஜூன் மாதம் நடுப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறவுள்ளது. (137)

# சமய அறநெறி சார்ந்த விடயங்களிலும் மாணவர்கள் ஆர்வம் காட்டவேண்டும்

## அதிபர் தெரிவிப்பு

மாணவர்கள் தாம் கற்கும் பாடங்களில் காட்டுகின்ற ஆர்வத்தில் சிறிதளவேனும் சமய கலை கலாசார மற்றும் அறநெறி சார்ந்த விடயங்களிலும் காட்டிச் செயற்படுவதன் ஊடாக பூரண மனித சமுதாயத்தை உருவாக்க முடியும் என பொலிகண்டி பத்திரகாளி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி கதிர்காமநாதன் தெரிவித்துள்ளார்.

பொலிகண்டி மருதாம்புலம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட திறன்விருத்திப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வு புத்தாண்டு தினத்தன்று ஆலய முன் மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சமய கலை கலாசாரங்கள் கிளை மாறி நிலை மாறி வருகின்ற இக்காலகட்டத்தில் ஆன்மீக நற்சிந்தனைகள் மூலமாக மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கையில் மாணவர்கள் அறநெறிப் போதனைகளில் பங்குபற்ற வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் தனியார் கல்வி நிறுவனங்கள் விடுமுறை வழங்கியுள்ளன. ஆனாலும் ஒரு சில மாணவர்கள் அந்நாளில் விசேட பாடங்களுக்காகச் செல்கின்றனர்.

இவ்வாறாக ஏனைய பாடங்களில் ஆர்வம் காட்டுகின்ற மாணவர்கள் அதற்கு அனுமதியளிக்கின்ற பெற்றோர்கள் வாரத்தில் வெள்ளிக்கிழமைகளில் அறநெறிப் பாடத்திற்காக அனுப்ப வேண்டும்.

அத்துடன் இவ் அறநெறிப் பாடசாலையில் பாலர்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளுடன் அறவழி ஆசிரியர் குழாம் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவதுடன், பல போட்டிகளும் பரீட்சைகளும் நடைபெற்றும் வருகின்றது.

எனவே, நல்லதொரு மாணவர் சமுதாயத்தை ஆன்மீக அறநெறிகளூடாக வள்தது எதிர்காலத்தில் சமய கலை கலாசாரத்தை கட்டிக்காக்கின்ற பூரண மனித சமுதாயத்தைக்காண பெற்றோர்களாகிய நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (116)

# மோட்டார் சைக்கிள் திருடிய நபர் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பகுதியில் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் அதே தினத்ன்று குறித்த பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதாகவும் இதில் காயமடைந்த சந்தேகநபரான சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த கருணாகரன் செல்வம் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் நேற்று நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் மருத்துவர் ஜெயரட்ணம், மருத்துவர் ஸ்ரீ ஜனகன் ஆகியோர் நோயாளர்களைப் பரிசோதிப்பதைக் காணலாம். (137)

# சிறுபான்மை இந்துக்களை ஒன்றிணைத்து ஆதரவு திரட்டும் நரேந்திரமோடி



பாஜக-வின் பிரதமர் வேட்பாளர் மோடியின் யோசனையின்படி நாடு முழுவதும் உள்ள அரசியல் பின்புலம் இல்லாத சிறுபான்மை இந்துக்களை ஒருங்கிணைத்து ஆதரவு திரட்டும் நடவடிக்கையில் பா.ஜ.க ஈடுபட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில் விஸ்வகர்மா, குஷாவா, கஸ்யாப், பகேல், ஹாக்கியா, பிரஜாபதி ஆகிய இந்து சமூகத்தினர் சிறுபான்மையினராக இருக்கின்றனர். சில சமூகத்தினர் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும் அவர்கள் அரசியல் பின்புலம் இல்லாமலும், ஒரே இடத்தில் வசிக்காமல் ஆங்காங்கே சிதறியும் காணப்படுகின்றனர். இதுபோல் இந்தியா முழுக்க இருக்கும் குறைந்த எணணிக்கையிலான இந்துக்களை ஒருங்கிணைத்தாலே பா.ஜ.க-வுக்கு கூடுதலாக 10 முதல் 13 சதவீதம் வரை வாக்குகள் கிடைக்கும் என்று மோடியின் ஆலோசகர்கள் புள்ளிவிவரங்களை சேகரித்து மோடியிடம் சமர்பித்துள்ளனர்.

அதன்படி அனைத்து மாநிலங்களிலும் உள்ள இந்து சிறுபான்மையினரை ஒருங்கிணைத்து ஆதரவு திரட்டும்படி பா.ஜ.க தலைமை, அக்கட்சியினருக்கு உத்தர விட்டுள்ளது. வட இந்தியாவில் இந்த உத்தி தீவிரமாக பின்பற்றப்பட்டு வரும் சூழலில் தமிழக பா.ஜ.க தலைவர்களும், வேட்பாளர்களும் அதனைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

விஸ்வகர்மா, உடையார், குயவர், நாயர், சௌராஷ்டிரா, சாலியர், யாதவர், போயர், ஒட்டர், கிருஷ்ணவகை செட்டியார் ஆகிய சமூகத்தினரை அவர்கள் வைத்திருக்கும் அமைப்புகள் மூலமும் முக்கியப் பிரமுகர்கள் மூலமும் சந்தித்து பா.ஜ.க-வினர் ஆதரவு திரட்டி வருகின்றனர்.

# பிரதமர் மன்மோகன் சிங் தமிழகத்தில் தேர்தல் பிரசாரம்



சோனியாகாந்தி, ராகுல்காந்தியைத் தொடர்ந்து பிரதமர் மன்மோகன்சிங்கும் நாளை மறுதினம் தமிழகம் செல்ல உள்ளார். சிவகங்கை தொகுதியில் ப.சிதம்பரத்தின் மகனை ஆதரித்து அவர் பிரசாரம் மேற்கொள்கிறார்.

நாடாளுமன்ற தேர்தலில் தமிழக காங்கிரஸ் கட்சி தனித்து போட்டியிடுகிறது. போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து தமிழக காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் தமிழகம் முழுவதும் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். நடிகர் கார்த்திக்கும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்துப் பிரசாரம் மேற்கொண்டுள்ளார்.

கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் எச்.வசந்தகுமாரை ஆதரித்து கடந்த 16ஆம் திகதி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி பிரசாரம் செய்தார். இதைத் தொடர்ந்து நாளை இராமநாதபுரம் தொகுதியில் போட்டியிடும் திருநாவுக்கரசரை ஆதரித்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் ராகுல்காந்தி பிரசாரம் செய்யவுள்ளார்.

இந்த நிலையில் சிவகங்கை தொகுதியில் போட்டியிடும் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி ப.சிதம்பரத்தை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக பிரதமர் மன்மோகன்சிங் தமிழகம் செல்ல உள்ளார்.

## உலகச் செய்திகள்

# விபத்துக்குள்ளான கப்பலின் மாலுமி விசாரணைக்காக கைது

தென் கொரிய கப்பல் விபத்துடன் தொடர்புடைய மாலுமி கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி தென் கொரியாவிற்கு அருகில் சுற்றுலா சென்ற கப்பல் விபத்துக்குள்ளானது.

குறித்த கப்பலில் 475 பேர் பயணம் செய்துள்ளனர். இதில் 325 பேர் மாணவர்கள் ஆவ. கப்பல் புறப்பட்ட மூன்று மணி நேரத்தில் விபத்துக்குள்ளானது.

தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்தை நெருங்கிய போது, கப்பல் உடைந்து மூழ்கிக் கொண்டிருந்தது. காணாமற் போனவர்களை மீட்கும் பணியில், 169 படகுகளும், 29 ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டு வருகின்றன.

இதுவரை 179 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். 28 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 268 பேரைக் காணவில்லை. சீரற்ற கால




நிலையால் மீட்புப் பணிகள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், கப்பல் எப்படி மூழ்கியது என்பது குறித்து கப்பல் நிர்வாகம் உரிய பதில் வழங்கவில்லை. அந்தக் கப்பலில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் விபத்திற்கு காரணமான கப்பலின் மாலுமியை கைது செய்ய வேணடும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், கப்பல் நிர்வாகம் விபத்திற்கான ஆதாரங்களை அழித்திருக்கலாம் என்பதை மேற்கோள் 'காட்டியுள்ள தென் கொரியாவின் மோக்போ உள்ளூர் நீதிமன்றம், விபத்திற்குள்ளான கப்பலின் மாலுமி லீ ஜூன் சியோக் மற்றும் அவரது பணிக்குழுவில் இருந்த 2 உதவி மாலுமிகளையும் கைது செய்ய பிடிவிறாந்து பிறப்பித்தது.

இதையடுத்து, மாலுமி லீ கைது செய்யப்பட்டு பொலிஸ் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அவர் மீது பணியில் அலட்சியமாக இருத்தல், கடல்சார் சட்டங்களை மீறுதல் உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# 3 வெளிநாட்டு வங்கிகளில் சோனியாவுக்கு இரகசியக் கணக்குகள்




சோனியாவிற்கு மூன்று வெளிநாட்டு வங்கிகளில் இரகசியக்கணக்கு உள்ளது என பா.ஜ.க, தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். அசாம் மாநிலத்தில் இறுதிக்கட்ட தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டுள்ள இவர் கவுகாத்தியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். மூன்று வெளிநாட்டு வங்கிகளில் சுமார் 1.5இலட்சம் கோடி ரூபாய் சேமித்து வைத்துள்ளார்.

மேலும் வத்திக்கான் தலைமையிடமாக கொண்டு செயல்படும் வங்கியில் இருந்து 10 பில்லியன் அமெரிக்க டொலரை எடுத்துள்ளார். வத்திக்கானில் உள்ளவங்கி கணக்கு விவரங்களை போப் ஆண்டவர் வெளியிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

மற்ற இரண்டு வங்கி கணக்குகள் முறையே சுவிட்சர்லாந்தில் உள்ள பசெல் நகரில் அமைந்துள்ள சாராசின்வங்கி கிளையிலும், சூரிச் நகரில் உள்ள பிக்டெட் வங்கிக்கிளையிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ளது என்றார்.

# 12 பேரின் கால்களை கழுவி முத்தமிட்டார் பாப்பாண்டவர்



வத்திக்கானில் நடந்த புனித வியாழன் வழிபாடு அன்று 12 பேரின் காலை கழுவி பாப்பாண்டவர் முத்தமிட்டுள்ளார்.

சிலுவையில் அறைவதற்கு முந்தைய நாள் இரவில் இயேசுகிறிஸ்து, தனது 12 சீடர்களுக்கு விருந்தளித்தார். பின்னர் அவர்களின் கால்களை கழுவி சுத்தம் செய்து முத்தமிட்டார்.

தலைவராக இருந்தாலும் தொண்டர்களுக்கு பணியாற்ற வேண்டும் என்று அவர்களுக்கு அன்பு கட்டளையிட்டார்.

புனித வெள்ளிக்கு முந்தைய நாளை புனித வியாழன் ஆக கிறிஸ்தவர்களை கடை பிடித்து வழிபாடு செய்கின்றனர்.

புனித வியாழன் வழிபாட்டு நிகழ்ச்சி வத்திக்கான் நகரில் நடந்தது.

அதில் பாப்பாண்டவர் தலைமை தாங்கி வழிபாடு நடத்தினார், அப்போது எண்ணையை புனிதப்படுத்தும் சடங்கு நடந்தது.

அதில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரும் மற்றும் பாதிரியார்களும் கலந்து கொண்டனர்.

அப்போது பாப்பாண்டவர் பேசுகை யில், பாதிரியார்கள் மிக எளிமையான வாழ்க்கை வாழ வேண்டும், கிறிஸ்தவ தேவாலயங்கள் கதவுகள் திறந்து கிடக்கும் வீடாக, பாவப்பட்டவர்களின் முகாம் ஆக தெருக்களில் வாழ்பவர்களின் இல்லமாக நோயாளிகளின் அன்பு நிலையமாக இளைஞர்களின் முகாம் ஆக, வகுப்பு அறைகளாக திகழ வேண்டும் எனக் கூறினார்.

மாலையில் ரோம் புறநகரில் கிறிஸ்தவ தேவாயலம் நடத்தும் மறுவாழ்வு மையத்ததுக்கு சென்றார், அங்கு தங்கியிருக்கும் 12 பேரின் கால்களை கழுவி சுத்தம் செய்து முத்தமிட்டார்.

அவ்வாறு கால்களை கழுவியவர்கள் 16 முதல 86 வயதுக்குட்பட்டவர்கள், அவர்களில் 4 பேர் பெண்கள், 75 வயது ஹமீது என்ற முஸ்லீம் நபர் ஒருவர். ஆகியோர் அடங்குகின்றனர்.

இதற்கு முன்னர் இந்நிகழ்ச்சி வத்திக்கான் அல்லது ரோமில் உள்ள கிறிஸ்தவதேவாலயத்தில் தான் நடைபெறும்.

அப்போது 12 பாதிரியார்களின் கால்களை பாப்பாண்டவர் கழுவி சுத்தம் செய்வார்.

ஆனால், புதிய பாப்பாண்டவராக பதவியேற்றுள்ள பிரான்சிஸ் அதன் மரபை மாற்றி மறுவாழ்வு மையத்துக்குச் சென்றுள்ளார்.

# வாலிபர் கழித்த சிறுநீரால் வீணாகியது 2 கோடி லீற்றர் குடிநீர்

அமெரிக்காவில் வாலிபர் கழித்த சிறுநீரால் 2 கோடி லீற்றர் தண்ணீர் வீணாகியுள்ளது.

அமெரிக்காவில் ஓரிகான் மாகாணத்தில் உள்ள போர்ட்லேண்ட் என்ற இடத்தில் மிகப் பெரிய நீர்த்தேக்கம் உள்ளது. வனப்பகுதிகளில் இருந்து நீரைக்கொண்டு வந்து இயற்கையான சூழலுக்கு மத்தியில் தண்ணீரை சேமித்து மக்களுக்கு குடிநீர் வழங்கி வருகின்றனர்.

இந்த நீர்த்தேக்கத்தில் சுமார் 2 கோடி லீற்றர் தண்ணீர் சேமிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை நீர்த்தேக்கம் அருகே விலங்கின் கழிவு கிடந்தது. ஆனால், அதைப் பார்த்த போது மனிதர்கள் வந்து சென்றதற்கான தடயங்கள் இருந்தன. சந்தேகப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் பதிவான காட்சிகளை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

அதில், சுமார் 18 வயது நிரம்பிய 3 வாலிபர்கள் வேலிக்குள் அத்துமீறி நுழைந்தது தெரிந்தது. அதில் ஒருவர் குடிநீர் தேக்கத்தில் சிறுநீர் கழிப்பதும் பதிவாகியிருந்ததை பார்த்து அதிகாரிகள் அதிர்ச்சி அடைந்தனர்.

சுகாதாரமற்ற குடிநீரை மக்களுக்கு விநியோகம் செய்யக்கூடாது என்பதால் நீர்த்தேக்கத்தில் இருந்து மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனை கூடத்துக்கு ஆய்வுக்கு அனுப்பினர்.

இதனைத் தொடர்ந்து நீர்த்தேக்கத்தில் இருந்த சுமார் 2 கோடி லீற்றர் தண்ணீரை அதிகாரிகள் வெளியேற்றினர். பின்னர் நீர்த்தேக்கம் சுத்தம் செய்யப்பட்டு புதிதாக நீர் நிரப்பப்பட்டது என்று நீர்த்தேக்கத்தை நிர்வகித்து வரும் அதிகாரி டேவிட் செப் கூறியுள்ளார்.

# கிழக்கு, மேற்கை இணைக்கும் மட்டு, மண்முனைப்பாலம் திறப்பு



ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளை இணைக்கும் மண்முனைப் பாலம் நேற்று மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மண்முனைப்பாலத்திற்கு செல்லையா இராசதுரை பிரதேச அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டதுடன் கருங்கற்களும் கொண்டுவரப்பட்டிருந்தன. ஆனால் 1983ஆம் ஆண்டுக்கு பின் பாதுகாப்பு அமைச்சு இந்தப் பாலக் கட்டுமானப்பணிக்கு அனுமதி வழங்காததையடுத்து இது நிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளதால் படுவான்கரையில் உள்ள பல கிராமங்கள் நன்மை அடையவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையையும், எழுவான்கரையையும் இணைக்கும் முக்கிய போக்குவரத்துப் பாதையான மண்முனை ஆற்றுக்கு மேலாக இப்பாலம் அமைப்பது தொடர்பான ஒப்பந்தம் 2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கும் ஜெய்க்கா நிறுவனத்திற்குமிடையில் ஜப்பானில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது அமைக்கப்பட்டுள்ள பாலத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வு 2012 செப்ரெம்பர் 04ஆம் திகதி பட்டிப்பளை பிரதேச பதில் பிரதே செயலாளர் ந.வில்வரெத்தினம் தலைமையில் நடைபெற்றிருந்தது. பாலத்தின் நிர்மாணப் பணிகள் 33 மாதங்களில் நிறைவடையும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம்திகதி வேலைத்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்று மண்முனைப்பாலம் 210 மீற்றர் ஆகவும், இரு பக்கங்களிலும் 500 மீற்றர் அளவான மதகாகவும் (கோஸ்வே) மொத்தமாக 1210 மீற்றரில் அமைக்கப்பட்டுள்ளது. ஜப்பான் நாட்டின் நன்கொடையில் படுவான்கரையையும் எழுவான்கரையையும் இணைக்கும் வகையில் மண்முனை ஆற்றுக்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள இப்பாலம் ஜப்பானின் 1473 மில்லியன் ரூபா செலவிலும் இலங்கை அரசின் 393 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், ஜப்பானின் இலங்கைக்கான தூதுவர் நொபுகிரோ றோபோ, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜித், உற்பத்தி ஊக்குவிப்பு அமைச்சர் பசீர் சேகுதாவூத், பொருளாதாரப் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், மீளகுடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# நெல்லியடியில் நேர்முகத்தேர்வு 1700 பேர் பங்கேற்பு

(நெல்லியடி)

பாதுகாப்பு அமைச்சின் கீழ் பல்வேறு தொழில்களுக்காக ஆளணியினரை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகத்தேர்வு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற

இந்நேர்முகத் தேர்வில் 1700 பேருக்கு மேற்பட்டோர் ய மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து கலந்து கொண்டனர்.

இதில் ஆசிரியர்கள், தாதிமார், வயரிங், பைப்பிற்றிங், தச்சு, மேசன் உள்ளிட்ட பல தொழில்களுக்கு தகைமைக்கு ஏற்ப தெரிவு நடைபெற்றதாகக் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒரு பகுதியினர் முகாமைத்துவப் பயிற்சிக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் பயிற்சி முடிவடைந்ததும் 30 ஆயிரம் ரூபா சம்பளத்தில் தொழிலில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் மிகுதியானவர்களுக்கு படிப்படியாக பயிற்சிகள் வழங்கப்பட்டு அரச சேவையில் அமர்த்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# புதிய பெயரில் சூதாட்ட மையம் அரசின் திட்டமென்கிறது ஜே.வி.பி

கசினோ மற்றும் சூதாட்ட பந்தயம் தொடர்பில் அரசாங்கம், புதிய பெயரில் சட்டம் ஒன்றை கொண்டு வரவுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கசினோ மற்றும் சூதாட்ட பந்தயங்களுடன் கூடிய இரண்டு நட்சத்திர ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை மாற்றி, வேறு விதமாக எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள புதிய பெயரிலான இந்த வர்த்தமானியில் திருத்தங்களை முன்வைக்க எண்ணியுள்ளது.

விஸ்தீரணமான அதி ஆடம்பர சுற்றுலா விடுதி வசதிகள் மற்றும் அதனுடன் கூடிய வசதிகளுடான ஹோட்டல் தொகுதி என்ற பெயரிலான இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் சூதாட்ட வசதிகளை கொண்ட ஹோட்டல்களை நிர்மாணிக்கும் வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது.

எதிர்க்கட்சிகள் மற்றும் நாட்டில் எழுந்த கடும் எதிர்ப்புகள் காரணமாக அரசாங்கம் அதனை திரும்ப பெற நேர்ந்தது.

இந்த நிலையில் ஏற்கனவே தாக்கல் செய்த வர்த்தமானி அறிவித்தலையே, அரசாங்கம் வேறு பெயரில் தற்போது தாக்கல் செய்ய உள்ளது. இதற்கு ஜே.வி.பி ஆதரவு வழங்காது என அவர் குறிப்பிட்டார்.

# புலிகளுக்கு நிதியுதவி ஆஸியுடன் பேசும் அரசு

அவுஸ்ரேலிய தமிழ்க் காங்கிரஸ் புலிகளின் செயற்பாடுகளுக்கு நிதி உதவியளிப்பதாக சாடியுள்ள அவுஸ்ரேலியாவுக்கான இலங்கைத்தூதர் சமரசிங்க இது தொடர்பாக அவுஸ்ரேலிய அரசாங்கத்துடன் பேச்சுவாத்தை நடாத்தி, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் ஏ.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய விசேட செவ்வியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர், இலங்கையில் புலிகள் அமைப்பை தோல்வியடையச்செய்த போதிலும், அதனுடன் இணைந்த முன்னணி அமைப்புகள், அவர்களது தேசிய எல்லையை மீறி, ஈழ ராச்சியமொன்றை உருவாக்கும் நோக்கத்தில் செயற்படுகின்றன. அவர்கள் தொடர்ந்தும் பிரிவினைவாத பயங்கரவாத நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தி, பிளவுபட்ட ஒரு ராச்சியத்தை உருவாக்கும் கனவை நனவாக்குவதற்கு, முயற்சித்து வருகின்றனர். இலங்கை அரசாங்கம் இவ்வாறு செயற்படும் அமைப்புகளின் செயற்பாடுகளை தொடர்ந்தும் கண்காணித்து வருகிறது. புலிகள் அமைப்புடன் தொடர்புடைய குழுக்கள், பிரிவினைவாத கொடிகளை ஏந்தி, பிரிவினைவாத வரைபடங்களை காட்சிப்படுத்தி, அவுஸ்ரேலியாவிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் நிதி திரட்டும் செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம், தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு முயற்சிக்கும் இவர்கள் வாரமொன்றுக்கு ஒரு டொலர் வீதம், ஆண்டொன்றுக்கு 52 டொலரை திரட்டி வருகின்றனர். இவ்வாறான எந்தவொரு அமைப்பிற்கும், புலிகள் அமைப்பின் மீட்பாளர்களாக மாற முடியாது. நாம் இது தொடர்பான தக்வல்களை திரட்டியுள்ளோம். அத்துடன் மேலும் பல தகவல்கள், எமக்கு கிடைத்த வண்ணமுள்ளன. எதிர்காலத்தில் நாம் அவுஸ்ரேலிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி, இது குறித்து செயற்படவுள்ளோம் என்று கூறியுள்ளார்

# பிரிட்டன் எம்.பி.க்களின் பயணம் இரத்து; பிழையான தகவல்களே காரணம்

## முரளியின் தர்மஸ்தாபனம் விளக்கம்

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் கிரிக்கட் வீரர் முத்தையா முரளிதரனினால் இலங்கைக்கு அழைக்கப்பட்ட ஐந்து பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது பயணத்தை இரத்துச் செய்தமைக்கு பிழையான தகவல்களே காரணம் என்று முரளிதரனின் தர்மஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

முத்தையா முரளிதரன், பிரித்தானியாவுக்கு விஜயம் செய்து பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவருக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும் லோரன்ஸ் ரொபட்சன் ( கொன்சவேட்டிவ்), லிட்டெல் கிரிங்கர் (கொன்சவேட்டிவ்), செரோன் ஹொட்சன் ( தொழில்கட்சி), ஸ்டீபன் ஹெப்பேன் (தொழில்கட்சி), பெய்ஸ்லி ஜுனியர் ஆகியோர் இறுதி நேரத்தில் தமது பயணத்தை இரத்துச்செய்தனர்.

இதற்கு காரணம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை அரசாங்கத்தின் செலவில் முரளிதரன் மூலமாக இலங்கைக்கு அழைக்கப்படுவதாக வெளியான தகவலேயாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த ஐவரின் பயணத்துக்கும் இலங்கை அரசாங்கம் செலவுகளை பொறுப்பேற்கவில்லை என்று முரளிதரனின் தர்மஸ்தாபன பொருளாளர் குறிப்பிட்டுள்ளார்.

# வீதிக்கு ஒளியேற்றிய வர்த்தகர்களுக்கு பாராட்டு

(நெல்லியடி)

நெல்லியடிச் சந்திப்பகுதியில் மின் விளக்குகள் ஒளிராமல் இருந்த நிலையில் நெல்லியடி வர்த்தக சங்கத்தினர் பொதுமக்களின் நலன்கருதி அவற்றை சீர்ப்படுத்தியுள்ளனர்.

முன்னர் இப்பகுதியில் வீதி விளக்குகள் ஒளிராமல் வீதி இருளில் மூழ்கிக் காணப்பட்ட நிலையில் இரவு வேளைகளில் இப்பகுதியால் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் தற்போது வர்த்தக சங்கத்தினர் இப்பகுதியில் 2 வீதி மின்விளக்குகளை பொருத்தி வீதிக்கு ஒளிவழங்கியுள்ளனர். இச்செயற்பாட்டை நெல்லியடிப் பகுதி மக்கள் பாராட்டியுள்ளனர். (18)

### பி.பி.சி...

அனுமதி வழங்கப்படும் என அமைச்சின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும் விசா அனுமதி முடிவடைந்த பின்னர், அவர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை பி.பி.சி. செய்தியாளரின் விசா நீடிப்பிற்கான விண்ணப்பத்தை ஏற்காமைக்கு வெளிநாட்டு ஊடகவியலாளரொருவருக்கு 5 வருடங்களே நாட்டில் தங்க அனுமதியென்ற உள்நாட்டு விசாகொள்கையே காரணமென ஊடகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

### பிரச்சினைகளை...

வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியாவுக்கோ, ஐ.நாவுக்கோ என்ற தமது பிரச்சினைகளை கூறுவதில் பயனில்லை. அவற்றை உள்நாட்டில் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஒட்சிசன்...

பொ.ஐங்கரநேசன் அப்பகுதிக்குச் சென்றிருந்தார். அங்கு ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் கடும் வறட்சி காரணமாக தொண்டைமானாற்றுக் கடல் நீரேரி வழமைக்கு மாறாக அதிகம் வற்றியுள்ளது. எஞ்சியுள்ள குறைந்தளவு நீரில் எல்லா மீன்களுக்கும் போதுமான அளவு ஒட்சிசன் இல்லை. அதுமட்டும் அல்லாமல் உயர் வெப்பநிலை காரணமாக நீரில் ஒட்சிசனின் கரைதிறனும் குறைவாக உள்ளது. இந்த ஒட்சிசன் பற்றாக்குறைவே மீன்களின் சடுதியான இறப்புக்கான பிரதான காரணமாகும்.

ஒட்சிசன் பற்றாக்குறைவுக்குச் சகிப்புத் தன்மையைக் கொண்டிராத திரளி மீன்களே முதலில் அதிகளவில் இறக்க ஆரம்பித்துள்ளன. ஒட்சிசன் பற்றாக்குறைவுக்கு ஓரளவேனும் தாக்குப் பிடிக்கக்கூடிய கெளிறு மற்றும் விலாங்கு மீன்கள் நீரின் மேல்மட்டத்துக்கு வந்து சுவாசிக்க முயல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. நீர் ஆவியாகுவதால் ஏற்படும் உப்புச் செறிவு அதிகரிப்பும் இன்னுமொரு உபகாரணமாக இருக்கக் கூடும். மற்றப்படி, மீன்களின் இறப்புக்கு நஞ்சு காரணம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்

# அமைதிச் சூழலுக்கு சோதனைகள் வராமல் காக்க வேண்டும் மக்கள்

## சந்திரகுமார் எம்.பி அறிவுறுத்து



(பளை)

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழல் காரணமாக மக்களின் வாழ்விலும், பிரதேசங்களின் அபிவிருத்தியிலும் பல முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இந்த அமைதிச் சூழலுக்கு சோதனைகளும், நெருக்கடிகளும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரது கடமையும் பொறுப்புமாகும் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச்சங்கத்தின் நான்காவது ஆண்டுவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தரர் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்

கிடைத்த சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். யுத்தகாலத்தில் அமைதிச் சூழல் அற்ற நிலையில் எங்களால் அபிவிருத்தியை மேற்கொள்ள முடியவில்லை. மக்கள் மத்தியில் மேம்பாடு அடையமுடியவில்லை. ஆனால், இன்று அந்த சூழல் மலர்ந்திருக்கிறது.

இந்த சூழலுக்கு சோதனைகள் வரக்கூடாது நெருக்கடிகள் வந்துவிடக்கூடாது. பொறுப்பற்ற சிலரின் செயற்பாடுகள் ஒட்டுமொத்த சமூகத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கிவிடக் கூடாது. ஆகவே, மக்களது விழிப்புணர்வு முக்கியமானது.

விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரின் அரசியல் கருத்துகளும், செயற்பாடுகளும் மக்களின் வாழ்வில் மீண்டும் அவலத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. அவர்களை நீங்கள் இனங்கண்டு அவர்களை அந்த செயற்பாட்டில் இருந்து செயற்பட முடியாதவர்களாக ஆக்க வேண்டிய பொறுப்பு மக்களிடம் இருக்க வேண்டும்

பச்சிலைப்பள்ளி பிரதேசம் கடந்த நான்கு ஆண்டுகளில் மிகப் பெரிய முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது. யுத்தத் தின்போது பாரிய அழிவை எதிர்கொண்ட பிரதேசமாக பச்சிலைப்பள்ளி பிரதேசம் காணப்பட்டது. ஆனால், மிகக் குறுகிய காலப் பகுதியில் இந்த பிரதேசம் பாரிய முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் கண்டிருக்கிறது. இந்தப் பிரதேசம் கிளிநொச்சியின் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் செழிப்பான ஒரு பிரதேசம். இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதா ரத்தை பாதுகாக்ககூடிய அளவுக்கு ,ந்த பிரதேசத்தின் வளம் அமைந்திருக்கிறது. இந்தப் பிரதேசத்தை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டுவர வேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பிரதேச நலனில் அனைவருக்கும் அக்கறை இருக்க வேண்டும் என நான் கருதுகிறேன். அந்த வகையில் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்கத்தினர் ஒரு நீண்டகால அடிப்படையில் குறைந்தபட்சம் ஒரு பத்து ஆண்டுகள் அடிப்படையில் திட்டங்களை தயாரித்து செயற்படுத்தும்போது இந்த பளைப் பிரதேசம் மிகப் பெரிய வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய அளவுக்கு அபிவிருத்தி அடையும் எனவும் தெரிவித்தார்

பச்சிலைப்பள்ளி அபிவருத்தி சங்கத்தின் தலைவர் பாலச்சந்திரன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபபவதி கேதீஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ஜெயராணி, பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், வடக்கு மாகாண சபையின் பொதுச் சேவை ஆணைக்குழுவின் ஆணையாளர் தெய்வேந்திரம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர்களான அன்ரன் அன்பழகன், சுந்தரலிங்கம், இராசதுரை சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் சேதுகாவலர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர் சிவப்பிரகாசம், பச்சிலைப்பள்ளி கோட்டக் கல்வி அதிகாரி ஆனந்தசிவம், பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் தியாகராஜா, பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி சங்க லண்டன் கிளை இணைப்பாளர் லோகநாதன், சமூக சேவையாளர் தர்மலிங்கம் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# 7 ஆவது ஐ.பி.எல்

## பெங்களூர் றோயலிடம் வீழ்ந்தது மும்பை



(டுபாய்)

மும்பை அணிக்கெதிரான நேற்றைய போட்டியில் பெங்களூர் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஐ.பி.எல் தொடரின் 5ஆவது போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்- மும்பை இந்தியன்ஸ் அணிகள் டுபாய் சர்வதேச மைதானத்தில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி களத் தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 115 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அதிகபட்சமாக அம்பதி ராயுடு 35 ஓட்டங்கள் எடுத்தார்.

பெங்களூர் சார்பில் மிட்சல் ஸ்டார்க், வருண் ஆரோன், சாகல் தலா 2 விக்கெட் வீழ்த்தினார்.

116 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 17.3 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு இலக்கை அடைந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டிவில்லியர்ஸ் 45 ஓட்டங்கள் எடுத்தார். 57 ஓட்டங்கள் எடுத்த பார்த்தீவ் பட்டேல் ஆட்டநா[illegible]ன் விருதைப் பெற்றார்.

## கொல்கத்தா நைட்ரைடர்ஸ்-166/5

உத்தப்பா -56
பாண்டே -48
சகிப் அல்ஹசன்- 30

**விக்கெ**
கோல்டர் நைல் 2/27



**டெல்லி டேர்டெவில்ஸ்-167/6**
டுமினி- 52
கார்த்திக்- 56
அகர்வால்- 26

**விக்கெட்**
மோர்கல் 2/42

டெல்லி டேர்டெவில்ஸ் 4 விக்கெட்டுக்களால் வெ[illegible]

ஆட்டநாயகன்- டுமினி

# சிறுமியை துஷ்பிரயோகம் செய்து கைபேசியில் படம் பிடித்த ஆசிரியர்

(மட்டக்களப்பு)

தனியார் கல்வி நிலையமொன்றில் சிறுமியொருவரை துஸ்பிரயோகம் செய்து அதனை, கைத் தொலைபேசியில் வீடியோ எடுத்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாற்றில் தனியார் கல்வி நிலையமொன்றில் 11 வயதுச் சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்து அதனை தனது கையடக்க தொலைபேசியில் வீடியோ படம் எடுத்ததாக கூறப்படும் ஆசிரியர் ஒருவரை பொதுமக்கள் பிடித்து தங்களிடம் இன்று ஒப்படைத்ததாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் மட்டக்களப்பு பிள்ளையாரடிப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த ஆசிரியரின் கையடக்க தொலைபேசியை கைப்பற்றியுள்ளதாகவும், இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளப்பட் டுள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பிக்குவின் தாக்குதலில் விகாராதிபதி தேரர் மரணம்

(கொழும்பு)

பிக்கு ஒருவரின் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எல்பிட்டிய பகுதியிலுள்ள விஹாரையொன்றின் விகாராதிபதி தேரர் நேற்று உயிரிழந்தார்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி தாக்கப்பட்ட குறித்த தேரர் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# பயங்கரவாத செயற்பாட்டில் ஈடுபடவில்லை ஜே.வி.பி

## என்கிறார் சுனில் ஹந்துன்நெத்தி



(கொழும்பு)

ஜே.வி.பி ஒரு போதும் பயங்கரவாதத்தில் ஈடுபடவில்லை என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1969 ஆம் ஆண்டு ஜே.வி.பி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து அரசியல் அமைப்பாகவே செயற்பட்டது.

நாங்கள் பயங்கரவாதத்தில் ஈடுபடவில்லை. அன்று ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம். ஜே.வி.பியை தடைசெய்தது. அதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுத்தோம். அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரு க்கு கடிதம் மூலம் அறிவித்தோம்.

சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் முறையிட்டோம். தடையை மீறி நாங்கள் அரசியலில் ஈடுபட்டுவந்தோம்.

ஜே.வி.பி பயங்கரவாத அமைப்பாக எப்போதும் பெயரிடப்படவில்லை. இனிமேலும் அப்படி பெயரிடப்பட போவதுமில்லை.

எம்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. ஆனால் அவற்றுக்கு பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

இனவாத அமைப்புகள் போன்று ஜே.வி.பி இனவாத அணியில் சேர்ந்து விடவும் இல்லை என்றார்.

# ஏற்றுமதியை அதிகரிக்க வேலைத்திட்டம் ஆரம்பம்

நாட்டின், ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக உரிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுளளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்மைய, பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, துருக்கி போன்ற நாடுகளுக்கு இலங்கையில் ஏற்றுமதி நடவடிக்கைளை விஸ்தரிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால், முன்னதாக ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்க ஐக்கிய ராஜ்ஜியம், மத்திய கிழக்கு உள்ளிட்ட பல்வேறுபட்ட நாடுகளுக்கு இறக்குமதி ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

புதிய சந்தை வாய்ப்பு மற்றும் தொழில்நுட்ப பிரவேசம் ஆகியவற்றை அதிகளவு பெற்றுக் கொள்வதே இதன் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.